தரம் 5 – 11 வரை

எண்: 06 எழுத்து: 06
ஜூன் 2012

AHARAM அகரம்

எதிர்பார்ப்புக்கள் சுமந்து வரும்
ஒலிம்பிக் 2012

வரையறை தாண்டி
சிந்தித்தல்

Des: Sinan

மாதாந்த சிறுவர் சஞ்சிகை

40/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNEP

WORLD ENVIRONMENT DAY | 05 JUNE

Green Economy: Does it include you?



உலக சூழல் தினம்
ஜூன் 05

சூழல் தொடர்பான விடயங்களிலே இஸ்லாம் மிகக் கவனமாக நடந்து கொள்ளும்படி எம்மைப் பணிக்கிறது. பயன்தரும் மரங்களை வெட்டுவதைத் தடுக்கிறது. உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் யுத்தத்திற்கு தயாராக இருந்த படையை நோக்கி பயன்தரும் மரங்களை வெட்ட வேண்டாம் என உபதேசித்த வரிகள் இதனை எவ்வளவு அருமையாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன!

மரங்களை வெட்டுவதிலிருந்து தவிர்ந்திருப்பது மட்டும் இப் பிரச்சினைக்குத் தீர்வல்ல என்பதையும் மரங்களை நட்டு வளர்ப்பதும் சூழலைக் காப்பதில் காத்திரமான பங்களிப்பு வழங்கும் என்பதையும் அருமைத் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கற்றுத் தந்தார்கள்.

மரங்களை நடுவதுடன் மட்டுமல்லாது சுற்றாடலுடன் நேசமாகவும் நடந்து கொள்ள வேண்டும் என இஸ்லாம் வழிகாட்டல் வழங்குகிறது. சுற்றாடலைப் பேணிப் பாதுகாப்பதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. எனவே, நாம் சூழல் தினத்தில் மாத்திரமல்லாமல் என்றும் பசுமை உலகம் படைக்க பங்காற்றுவோம்!

facebook இல் Like செய்யுங்கள்...
www.facebook.com/aharamJmf

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகரம்

எண்: 06 ஜூன், 2012 எழுத்து: 06

பிரதம ஆசிரியர்
ஏ.ரி.எம். நௌபல்

ஆலோசனைக் குழு
அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச்.எம். ஹஸன் M.ED
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி, தேசிய கல்வி நிறுவகம்)

ஜெஸீமா ஆதம் லெப்பை B.Sc
(விஞ்ஞானப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம்)

ஆசிரியர்
எம்.ஏ.எல்.எம். பஸ்லுல் பாரிஸ் (நளீமி)

உதவி ஆசிரியர்
ஜே.எம். அஸீம் (நளீமி)

தளக் கோலம்
ஏ.ஏ.முஹம்மத் பவாஸ் (இஸ்லாஹி)

சந்தா விபரம்
1 வருட சந்தா 700 /-
6 மாத சந்தா 350 /-

தொடர்புகளுக்கு:
அகரம்
77, தெமடகொட வீதி,
கொழும்பு - 09.
தொ.பே: 011 268 9324, 011 720 6575
பெக்ஸ்: 011 2686030
Email: aharamipc@gmail.com
www.facebook.com/aharamJmf

உள்ளே...

06

14

12

27


வரையறை தாண்டி சிந்தித்தல் 20

08

37

பாடத்திட்டம்

வரலாறு	17	தமிழ்	25
விஞ்ஞானம்	33	புலமைப் பரிசில்	39

PUBLIC LIBRARY
JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் திறந்து பேசுங்கள்; மணம் கமழ வாழுங்கள்

முழு மனதுடனும் உங்கள் விவகாரங்களில் அக்கறையுடனும் அகரம் மீண்டும் உங்களைச் சந்திப்பதில் அகமகிழ்கின்றது; நீங்கள் வளமும் நலமும் பெறப் பிரார்த்திக்கின்றது.

மாணவத் தோழர்களே!

நிகழ்கால நிகழ்வுகளும் எதிர்கால எதிர்பார்ப்புகளும் இன்று மாணவர் சமூகத்தை பெரிதும் பாதித்துள்ளன. உலகம் நகரும் திசை புரியாது, வாழ்வின் உண்மை நிலை விளங்காது, தெளிவான தீர்மானம் மேற்கொள்ளும் வழி தெரியாது மாணவ சமூகம் அல்லல்படும் அவதி தெளிவாகத் தெரிகிறது.

மறுபுறம், நவீன உலகம் 'எமது வாழ்க்கை' பற்றிய பிழையான சிந்தனைகளைக் கட்டமைத்துள்ளது. வாழ்க்கை முறை (Life Style), கலாசாரம் (Culture) என அவை கட்டமைத்துள்ள நடத்தைகள் 'எமது வாழ்க்கை'யைத் துவம்சம் செய்துள்ளன. கவலைகள், சோகங்கள், மனச்சுமைகள் என 'எமது வாழ்க்கை' போராட்டமாகியுள்ளது. ஆடம்பர வாழ்க்கை மீதான ஆசையும் பணத்திற்காக பின்னால் அலையும் நிலையும் மோசமான கலாசாரமும் சுரண்டி அழித்து வாழும் நிலையுமாக நவீன உலகு கட்டமைத்த 'வாழ்க்கை' சுழன்று கொண்டிருக்கிறது.

சிரமமான இந்த விடயங்களையெல்லாம் ஏன் எங்களிடம் கூறுகின்றீர்கள் என்று நீங்கள் எண்ணுவது புரிகிறது. மாணவர்களே! இதுவெல்லாம் உங்கள் உள்ளத்தையும் அதன் நலத்தையும் பாதித்து உள்ளத்தின் தாங்கு சக்திக்கு அப்பாற்பட்ட சுமைகளை உங்கள் உள்ளங்கள் மீது சுமத்தியுள்ளன என்பது மறுக்க முடியாத உண்மை. 'நவீன வாழ்க்கை' எப்படி 'எமது வாழ்க்கை'யை கட்டமைக்க முடியும் என உரத்துக் கேளுங்கள்!

அன்பு, பாசம், அகமகிழும் ஆதரவு... என நீங்கள் தேடும் பட்டியல் நீண்டது.

பாசமாய் உட்கார்ந்து நான்கு வார்த்தைகள் பேச வேண்டிய தந்தை, உற்சாக மிழக்கும் போதெல்லாம் ஊக்கப்படுத்த வேண்டிய தாய், காவலரணாய் நிற்க வேண்டிய உறவுகள்... ஊரார், சுவையாக சாப்பிட்ட நாட்கள்... என நினைக்கும் போதே உரத்து அழவேண்டும்போல் உங்கள் உள்ளம் எண்ணுகிறதல்லவா?

மாணவத் தோழர்களே! உங்கள் வீட்டைப்போலவே பாடசாலையும் ஒரு குடும்பம். ஆசான்கள் புத்தகங்களை மட்டும் போதிக்கும் ரோபோக்கள் அல்ல. அவர்கள் மனிதர்கள்; இதயமுள்ளவர்கள். உங்கள் மீது பரிவும் பாசமும் காட்ட கடமைப்பட்டவர்கள். உங்கள் எதிர்காலம் செழிக்க தம்மை அர்ப்பணிப்பவர்கள். பிரகாசவெளி ஒன்றில் வாழ வழிகாட்டுபவர்கள். உங்கள் அறிவு விரிவாக வேண்டும் என்பது போலவே உங்கள் உள்ளங்கள் விரிவாக வேண்டும், சாந்தி பெற வேண்டும் என முழு மனதோடு உழைப்பவர்கள்; உங்களுக்காகப் பிரார்த்திப்பவர்கள்.

ஒருமுறை உங்கள் மனம் திறந்து தூய மனதுடன் அவர்களுடன் உரையாடுங்கள். உங்கள் மனச்சுமைகளை சொல்லுங்கள். நாம் கூறியவை உண்மையிலும் உண்மை என அறிவீர்கள்; தூய வழிகாட்டல் பெறுவீர்கள். பெரும் சுமைகள் இதயத்தை விட்டும் இறங்கியதாய் உணர்வீர்கள். உள்ளம் வலிமை பெறுவதை ஏற்பீர்கள். ஒளிவீசும் எதிர்காலம் தொட்டுவிடும் தூரத்தில் என்பதை நிச்சயப்படுத்துவீர்கள், இன்ஷா அல்லாஹ்.

"மனம் திறந்தால் மணம் கமழும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்குர்ஆன் கூறும் கதைகள்

அபூ ஹானிம்

சென்ற இதழின் தொடர்...

கப்பல் கட்டிய நபி

நபி நூஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுடைய வரலாற்றை அல்குர்ஆன் மிக அழகாகவும் இரத்தினச் சுருக்கமாகவும் சுவையாகவும் படிப்பினை நிறைந்ததாகவும் எமக்குக் கற்றுத் தருகிறது. ஸூரத்து ஹூதின் 25 முதல் 49 வரையான வசனங்கள் இதனை எடுத்தியம்புகின்றன. கருத்துச் செறிவுமிக்க வசனங்களால் உண்மைத் தகவல்களை ஒழுங்காகவும் நேர்த்தியாகவும் அல்குர்ஆன் போதிக்கும் விதத்தை நாம் நோக்குவோம்.

நாம் நூஹை அவருடைய சமூகத்தாரிடம் அனுப்பினோம். (அப்போதும் மக்களின் நிலைமை இவ்வாறே இருந்தது.) (நூஹ் கூறினார்) "நான் உங்களுக்குத் தெளிவாக எச்சரிக்கை செய்பவனாவேன். அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் நீங்கள் அடிபணியாதீர்கள்! (இல்லையானால்) துன்புறுத்தும் நாளின் வேதனை உங்களைப் பீடித்துக் கொள்ளுமோ என்று நான் அஞ்சுகின்றேன்."

(அவருடைய அறிவுரையை) ஏற்க மறுத்த அவருடைய சமுதாயத் தலைவர்கள் கூறினார்கள்: "எங்களுடைய பார்வையில் நீர் எங்களைப் போன்ற ஒரு மனிதரே அன்றி வேறல்லர். மேலும், எங்களிடையே யார் மிகவும் இழிவானவர்களோ அவர்கள் மட்டுமே சிந்திக்காமல் உம்மைப் பின்பற்றுவதைப் பார்க்கின்றோம். எனவே, எங்களைவிட எவ்விதச் சிறப்பும் உமக்கு இருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை. உண்மையில் உங்களைப் பொய்யர்கள் என்றே நாங்கள் கருதுகின்றோம்."

அதற்கு நூஹ் கூறினார்: "என் சமுதாயத்தினரே! கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்! நான் என்னுடைய அதிபதியிடமிருந்து தெளிவான சான்றினைப் பெற்றுள்ளேன். மேலும், அவன் தனது தனிப்பட்ட அருளையும் எனக்கு வழங்கியிருக்கின்றான். ஆனால், அது உங்கள் பார்வைக்குப் புலப்படுவதில்லை, நீங்கள் அதனை ஏற்றுக்கொள்வதுமில்லை. அவ்வாறாயின், நாம் அதனை வலிந்து உங்கள் மீது திணிக்க முடியுமா?

மேலும், என் சமுதாயத்தினரே! இந்தப் பணிக்காக நான் உங்களிடம் எந்தப் பொருளும் கேட்கவில்லை. என்னுடைய கூலியோ அல்லாஹ்வின் பொறுப்பில் உள்ளது. மேலும், எவர்கள் (எனது பேச்சை) ஏற்றுக் கொண்டிருக்கிறார்களோ அவர்களை நான் விரட்டுபவனல்லன். திண்ணமாக, அவர்கள் தங்களுடைய இறைவனைச் சந்திக்க இருக்கின்றார்கள். ஆனால் நான் உங்களை அறியாமையில் உழன்று கொண்டிருக்கும் சமுதாயத்தினராகக் காண்கின்றேன்.

மேலும், என் சமுதாயத்தினரே! நான் இவர்களை விரட்டிவிட்டால், அல்லாஹ்வின் பிடியிலிருந்து என்னைக் காப்பாற்றுபவர் யார்? இதைக்கூட நீங்கள் புரிந்து கொள்ள மாட்டீர்களா? மேலும், அல்லாஹ்வின் கருவூலங்கள் என்னிடம் உள்ளன என்றோ நான் ஒரு வானவர் என்றோ வாதிடவில்லை.

மேலும், எவர்களை உங்கள் கண்கள் இழிந்தவர்களாகக் காண்கின்றனவோ அவர்களைக் குறித்து 'அல்லாஹ் எந்த நன்மையையும் அவர்களுக்கு அளிக்கவில்லை' என்றும் நான் கூற மாட்டேன் -அவர்களின் உள்ளங்களிலுள்ளவற்றை அல்லாஹ்தான் நன்கு அறிகின்றான்- அவ்வாறு கூறினால் திண்ணமாக நான் அக்கிரமக்காரனாகி விடுவேன்."

இறுதியில் அவர்கள் "நூஹே! நீர் எங்களிடம் தர்க்கம் புரிந்துவிட்டீர்! அதுவும் அளவுக்கதிகமாக தர்க்கம் செய்துவிட்டீர்! நீர் உண்மையாளராயின் எந்த வேதனையைப் பற்றி எங்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றீரோ அந்த வேதனையை எங்களிடம் கொண்டு வாரும்" என்று கூறினார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றியுடைமை

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ تَعَالَى عَنْهُ قَالَ:

قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: لاَ يَشْكُرُ اللهَ مَنْ لاَ يَشْكُرُ النَّاسَ (أحمد، وأبو داود)

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "மனிதர்களுக்கு நன்றி செலுத்தாதவன் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த மாட்டான்." (அஹ்மத், அபூ தாவுத்)

நன்றி உணர்வு என்பது எம்மிடையே அல்லாஹ் உருவாக்கியுள்ள அன்பு என்ற மேலான உணர்வையும் மற்றவர்களின் மீதான எமது பாசத்தையும் அவர்கள் மீதுள்ள எமது கண்ணியத்தையும் வெளிப்படுத்துவதற்கான அழகிய வழிமுறைகளுள் ஒன்றாகும்.

இத்தகைய நன்றி உணர்வு இன்றைய உலகில் பெரிதாகப் போற்றப்படாமையினால் எல்லா வகையான வசதிகளையும் திறமைகளையும் நிறைவாகப் பெற்றிருந்த போதும் மனிதர்கள் மனதளவில் தனித்தனித் தீவுகளாக மாறி நெருக்கடிமிக்க வாழ்க்கையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இஸ்லாம் முஸ்லிம் சமூகத்தில் இத்தகைய நன்றியுணர்வு மிகைத்திருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றது. அல்லாஹ் தனக்கு நன்றி செலுத்துமாறு அல்குர்ஆனில் பணிக்கின்றான்.

"நீங்கள் நன்றி செலுத்துவீர்களாயின் நிச்சயமாக நான் எனது அருட்கொடைகளை உங்களுக்கு அதிகப்படுத்துவேன். நீங்கள் நிராகரித்தால் நிச்சயமாக எனது வேதனை கடினமானது." (ஸூரா இப்றாஹீம்)

எனவே, யாரேனும் ஒரு சகோதரன் எமக்கு ஏதேனும் ஒரு உதவியை செய்தால், எம்மோடு நல்ல முறையில் நடந்து கொண்டால், எமக்கு சிறியதோ பெரியதோ ஓர் அன்பளிப்பை வழங்கினால் நாம் எமது மன மகிழ்ச்சியை இஸ்லாம் காட்டித் தந்தபடி வெளிப்படுத்த வேண்டும். உண்மையில் இது எமது அடுத்த சகோதரனுக்கு நாம் செய்ய வேண்டிய கடமையும் கூட என்பதை உணர்ந்து செயற்படுதல் போற்றத்தக்கது.

"அல்லாஹ்வின் தூதருக்கு யாரேனும் ஏதாவது அன்பளிப்பை வழங்கினால் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அவருக்கு நன்றி தெரிவிப்பார்கள். இறைத் தூதரின் காரியமொன்றை யாரேனும் நிறைவேற்றினால் தன்னுடைய திருப்தியை மனப்பூர்வமாக தெரிவிப்பார்கள்." (அத் திர்மிதி)

இஸ்லாம் போதிக்கின்ற அடிப்படை நல்ல பண்புகள் அனைத்தும் இன்றைய தொழில்நுட்ப மற்றும் மேலைத்தேய கலாசாரத்தில் சிக்குண்டு அதன் உயிரோட்டத்தை இழந்து வெறும் வார்த்தைகளாக மட்டும் எமது வாழ்க்கைக்குள் வலம் வந்து கொண்டிருக்கின்றன.

கதாநாயகர்கள் என்ற வகையில் மாணவர்களாகிய நாம் ஏனையவர்களுக்கு முன்மாதிரிகளாக விளங்குவதற்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் வாழ்க்கையில் இழையோடிப் போயிருந்த இவ்வாறான சிறந்த முன்மாதிரிப் பண்புகளை எமக்குள்ளும் வாழ வைக்க வேண்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது செயற்பாடுகள் எவ்வாறு மிகச் சிறப்பாக அமைய வேண்டும் என்பதற்கு அண்ணலார் அழகிய முன்மாதிரிகளைக் காட்டித் தந்துள்ளார்கள். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தங்களது செயற் பாடுகளின்போது தன்னால் முடியுமானளவு முழுமை

முழு முயற்சியும் முடிவு நலவாய் அமையப் பிரார்த்தனையும்

யாக முயற்சித்துவிட்டு முடிவு நலவாய், வெற்றியாய் அமைய அல்லாஹ்விடம் இரு கரம் ஏந்துபவர்களாக இருந்தார்கள். எந்தவித முயற்சியும் செய்யாது ஒதுங் கியிருந்து இறைவனிடம் கரம் ஏந்துபவர்களாக நபியவர்கள் இருக்கவில்லை.

பத்ர் களத்தை நெருங்கியது முதல் அண்ணலார் வெற்றிவாகை சூட வேண்டும் என்பதற்காக பெரு முயற்சி எடுத்தார்கள். பத்ர் நோக்கி விரைந்தமை, பத்ரில் தங்குவதற்குரிய இடத்தைத் தெரிவு செய்தமை, சுற்றும் முற்றும் உள்ள நிலைமைகளை உளவறிந்து கொண்டமை, எதிரிகளின் பலம்-பலவீனத்தை அறிந்து கொண்டமை, கைதிகளை சிறைப்பிடித்து அவர்களிடமிருந்து தங்களுக்குத் தேவையான தகவல்களை அறிந்து கொண்டமை போன்றவை அத்தகைய முயற்சிகளில் சில. அது மாத்திரமன்றி தமது தோழர்களுக்கு நம்பிக்கை யூட்டும் விதமாக பல சுபசோபனங்களைக் கூறினார்கள்.

படையினருக்கு உற்சாகமளிக்கும் விதமாகவும் அவர்களை ஆர்வமூட்டியவர்களாகவும் நட்புட னும் சகோதரத்துவத்துடனும் அன்பாகவும் பண்பாக வும் நடந்து கொண்டார்கள். யுத்தத்தின் போது காணப் படும் கடுமையோ வெறித்தனமோ பண்பாடற்ற முறைகளோ அவர்களிடம் காணப்படவில்லை.

குறைஷிகள் மைதானத்திற்கு வந்தனர். குறைஷிப் படையும் இஸ்லாமியப் படையும் ஒன்று மற்றொன்றை நேருக்கு நேர் பார்த்துக் கொண்டபோது, நபி (ஸல்லல்லாஹி அலைஹி வஸல்லம்) அவர்கள் பிரார்த்தனை புரிந்தார்கள்.

"அல்லாஹ்வே! இதோ குறைஷிகள் கர்வத்து டனும் மமதையுடனும் உன்னிடம் போர் செய்ப வர்களாக உன்னுடைய தூதரைப் பொய்ப்பிப்ப வர்களாக வந்திருக்கின்றனர். அல்லாஹ்வே! நீ எனக்கு வாக்களித்த உனது உதவியைத் தருவாயாக! இக்காலைப் பொழுதில் அவர்களை அழிப்பாயாக!"

நபி (ஸல்லல்லாஹி அலைஹி வஸல்லம்) அங்குள்ள ஒரு மரத்தருகில் தொழுதவர்களாக இரவைக் கழித்தார்கள். முஸ்லிம்களும் மிகுந்த நம்பிக்கையுடனும் மன அமைதியுடனும் காலையில் தங்கள் இறைவனின் நற்செய்திகளைக் கண்கூடாகக் கண்டு கொள்ளலாம் என்ற ஆதரவுடன் இரவைக் கழித்தார்கள். (முஸ்லிம், ஸுனனுத் திர்மிதி)

"(நம்பிக்கையாளர்களே! உங்கள் மனம்) சாந்தியடைந்தவர்களாக, சிறியதொரு நித்திரை உங்களைச் சூழ்ந்து கொள்ளும்படி (இறைவன்) செய் ததை நினைத்துப் பாருங்கள்! அன்றி உங்கள் தேகத்தை நீங்கள் சுத்தப்படுத்திக் கொள்வதற்காகவும் உங்களை விட்டு ஷைத்தானுடைய அசுத்தத்தைப் போக்கி விடுவதற்காகவும் உங்கள் உள்ளங்களைப் பலப்படுத்தி, உங்கள் பாதங்களை உறுதிப்படுத்துவதற்காகவும் (அவனே) வானத்திலிருந்து மழையைப் பொழியச் செய்தான்." (அல்குர்ஆன் 8:11)

முஸ்லிம்களின் அணிகளைச் சரிசெய்து திரும்பிய பின் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) தனது இறைவன் தனக்கு வாக்களித்ததை அவனிடம் வேண்டினார்கள்.

"அல்லாஹ்வே! நீ எனக்களித்த வாக்கை நிறை வேற்றுவாயாக! அல்லாஹ்வே! நீ எனக்களித்த உனது வாக்கையும் ஒப்பந்தத்தையும் உன்னிடம் கேட்கிறேன்."

மோதல்களும் தாக்குதல்களும் கடுமையாகச் சூடுபிடித்து உச்சகட்டத்தை அடைந்தபோது,

"அல்லாஹ்வே! இக்கூட்டத்தை இன்று நீ அழித்து விட்டால் உன்னை வணங்குவதற்கு இப்பூமி யில் யாருமே இருக்க மாட்டார்கள். அல்லாஹ்வே! நீ இக்கூட்டத்தை அழிக்க நாடினால் இன்றைய தினத்திற்குப் பின் உன்னை யாரும் வணங்க மாட் டார்கள்" என்று அல்லாஹ்விடம் கையேந்தினார்கள்.

கரங்களை உயர்த்தியதால் அவர்களின் புஜத்தி லிருந்து போர்வை நழுவி விழுந்தது. அந்தளவு அல் லாஹ்விடம் மன்றாடிக் கேட்டார்கள். நபி (ஸல் லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் போர் வையை அபூ பக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) சரி செய்து, "அல்லாஹ்வின் தூதரே! போதும், நீங்கள் உங்கள் இறைவனிடம் அதிகம் வேண்டிவிட்டீர்கள்" என்றார்கள்.

நபியவர்களின் பிரார்த்தனையை அல்லாஹ் அங்கீகரித்து, வானவர்களை அனுப்பி உதவினான்.

"(உங்களைப்) பாதுகாக்குமாறு நீங்கள் உங்கள் இறைவனிடம் வேண்டியபோது அணியணியாக உங் களைப் பின்பற்றி வரக்கூடிய ஆயிரம் வானவர்க ளைக் கொண்டு நிச்சயமாக நான் உங்களுக்கு உதவி செய்வேன் என்று அவன் உங்களுக்குப் பதிலளித் தான்." (அல்குர்ஆன் 8: 9) ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரத்தம் உறிஞ்சும் நுளம்பு

ஆலிப் அலி (இஸ்லாஹி) www.aliaalif.tk

ஈயைப் போன்றே நுளம்புகளும் மனித வாழ்வுடன் இரண்டறக் கலந்தவை. பல்வேறு நோய்களைப் பரப்புவதால் நுளம்புகள் இன்று பெரும் தொல்லையாக நோக்கப்படுகின்றன. இவற்றின் உயிரியற் பெயர் 'டிப்டெரா' (Diptera) என்பதாகும். ஈயை விடவும் சிறிய ஓர் உயிரினம்தான் நுளம்பு. இச் சிறிய நுளம்பில் உள்ள சில அற்புதங்களைப் பார்ப்போம்.

ஈயைப் போன்றே நுளப்புக்கும் சிறிது சிறிதாக சுமார் நூறு கண்கள் உள்ளன. இரவில் தனது உணவுத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள வெளிக் கிளம்பும் நுளம்புகளுக்கு இக்கண்கள் இருளிலும் பார்வைத் திறனை வழங்குகின்றன. எமது உடலில் இரத்தத்தைப் பம்புவதற்காகத்தான் இதயம் தொழிற்படுகின்றது. இரத்தத்தையே உணவாகக் குடிக்கும் நுளம்புகளுக்கு வெவ்வேறு தொழில்களைச் செய்வதற்காக அச்சிறிய உடம்பிலும் அல்லாஹ் மூன்று இதயங்களை வழங்கியுள்ளான். அவற்றின் வாயில் 48 பற்கள் உள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. இரத்தத்தை உறிஞ்சுவதற்காக அதன் வாய்ப் பகுதியில் நீண்ட ஊசியொன்றும் உள்ளது. எமது உடலில் மயிர் முளைக்கும் இடத்தினூடாகத் தனது ஊசியைச் செலுத்தி இந்நுளம்புகள் இரத்தத்தை உறிஞ்சுகின்றன. சற்றுப் பலமாக உந்தி உடலில் ஊசியைச் செலுத்துவதற்கு அவற்றின் நீண்ட ஆறு கால்களும் உதவுகின்றன.

சில வகை நுளம்புகள் மனிதனின் தோலின் மீது அமர்ந்து இரத்தத்தை உறிஞ்சுவதற்கேற்ப அந்தத் தோலின் நிறத்திற்குத் தன்னை மாற்றி யாரும் பார்க்காத வண்ணம் இரத்தத்தை உறிஞ்சுகின்றன. சுமார் 60 மீட்டர்களுக்கு அப்பாலிருந்தே மனிதனின் இரத்த வாடையை நுகரும் ஆற்றல்மிகு உணர்ச்சிக் கொம்பையும் அல்லாஹ் இவற்றுக்குக் கொடுத்துள்ளான்.

அல்லாஹ் இணை வைப்பாளர்களுக்கு உதாரணமாக 22:73 இல் ஈயைப் பற்றியும் 29:41 இல் சிலந்தி வலையைப் பற்றியும் கூறி வசனங்களை இறக்கியதும் இதனைச் செவியுற்ற இணை வைப்பாளர்கள் அல்குர்ஆனைக் கேலி செய்யும் விதமாக "உங்கள் அல்லாஹ்வின் வேதத்தில் ஈயைப் பற்றி, சிலந்தியைப் பற்றியெல்லாம் கூறப்பட்டுள்ளனவா?" என்று வினவினர். இதற்குப் பதிலளிக்கும் விதமாக அல்லாஹ் பின்வரும் வசனத்தை இறக்கி வைத்தான்.

"நிச்சயமாக அல்லாஹ் நுளம்பையோ அதைவிட அற்பமானதையோ (அதன் மேலுள்ளதையோ) உதாரணமாகக் கூற வெட்கப்பட மாட்டான்." (2:26)

உண்மை, சத்தியம் என்பன எவ்வளவு அற்பமானதாகத் தோன்றினாலும் அதனைக் கூறுவதில் அல்லாஹ் வெட்கப்பட மாட்டான். இவ்வசனத் தில் بَعُوضَةً என்ற சொல் நுளம்பைக் குறிக்கின்றது. நுளம்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈயை விடவும் சிறியதோர் உயிரினம். நுளம்பை மாத்திரமல்ல فَمَا فَوْقَهَا என்ற சொற்களின் மூலம் அதனை விடவும் அற்பமான ஒன்றையும் அல்லாஹ் உதாரணமாகக் கூற வெட்கப்பட மாட்டான் என்கிறது இவ்வசனம்.

இது தவிர மற்றுமொரு கருத்தும் இதற்கு உண்டு. இப்பொருள் குறிக்கும் விடயம் இன்றுதான் நவீன விஞ்ஞானத்தால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஈயல்ல, நுளம்பல்ல நுளம்பின் மீதுள்ளது. (فَوْقَ என்றால் ஒன்றின் மேல் என்றும் பொருள்படுகிறது.) அதனை விடவும் அற்பமான உயிராக இருந்தாலும் அதனைப் பற்றிக் கூறவும் நான் வெட்கப்பட மாட்டேன் என்று நுளம்பின் தலையின் மேல் இருக்கும் ஓர் அற்பக் கிருமியின் உண்மைத் தன்மையைப் பற்றி எந்தவித நுணுக்குக் காட்டியும் இல்லாத அந்த நாளில் திருமறை கூறியிருக்கின்றது.



இங்கு படம் A முகத்தோற்றத்தையும் படம் B அதன் நுண்ணிய கண்களையும் படம் C அக்கண்களை இன்னும் பெரிதுபடுத்தியும் படம் D அக் கண்களுக்கிடையில் இருக்கும் அல்குர்ஆன் கூறும் அற்புத உயிரினத்தையும் காட்டுகின்றது.

இவ்வுயிரினத்திற்கு விஞ்ஞானம் 'ப்ளாஸ் மோடிம்' (Plasmodiam) என்று பெயரிட்டுள்ளது. 1898ஆம் ஆண்டு றொனால்ட் றொஸ் என்வர் தான் கியூலெக்ஸ் (Culex) நுளம்புகளில் 'ப்ளாஸ் மோடியம்' உள்ளதைக் கண்டுபிடித்தார். இதற்காக அவருக்கு 1902ல் நோபிள் பரிசும் வழங்கப் பட்டது. ஆனால் றொனால்ட் றொஸ் கண்டு பிடிப்பதற்கு முன்னர் அல்குர்ஆன் இவ்வறிவியல் அற்புதத்தை 14 நூற்றாண்டுகளுக்கு முன்பு கூறியிருந்தும் அது பற்றி சிந்திக்க ஒரு முஸ்லிம் விஞ்ஞானி கூட இருக்கவில்லையே என்று கவலை தான் வருகின்றது.



'ப்ளாஸ்மோடியம்' எனும் இந்நுண் கிருமிகளை எமது வெற்றுக் கண்களால் காண முடியாது. இவ்வகை உயிரிகள் நுளம்புகளின் உடலில் ஒட்டிக் கொண்டு பிற உயிர்களைத் தாக்குகின்றன. எமது உடலில் நுழைந்து இவை செய்யும் செயற்பாடு கள் மிகப் பயங்கரமானவை. நுளம்புகள் எம்மைக் குத்துகையில் அவற்றின் உடலில் இருக்கும் இந்நுண் உயிர்கள் மனித உடலில் நுழைந்து செங் குருதிச் சிறு தட்டுக்களில் ஊடுருவி அவற்றில் தங்கி விடுகின்றன. பின்னர் அங்கு இனப்பெருக்க செய்துவிட்டு குருதி வழியாகச் சென்று கல்லீர லைத் தாக்குகின்றன. இதனால் பல நோய்களுக்கும் மனிதன் ஆளாகின்றான். இந்தவகை நுண் கிருமி களால்தான் மலேரியா நோய் பரவுகின்றது.

இறைவனின் படைப்புக்கள் அனைத்தும் ஏதோ ஒரு விதத்தில் சான்றுகள், அத்தாட்சிகளை எமக்குப் புலப்படுத்துவனவாகவே இருக்கின்றன. அது பற்றி சற்றுச் சிந்தித்தாலே பல நூறு அற்புதங் கள் எமது சிந்தையில் படும்.

"(நபியே!) அவர்கள் இதன் வசனங்களைக் கவனித்து ஆய்வதற்காகவும் அறிவுடையோர் நல்லுணர்வு பெறுவ தற்காகவும் பாக்கியம் பெற்ற இவ்வேதத்தை உம்மீது அருளியுள்ளோம்." (38:29) ■

அகரம் விலை அதிகரிப்பு

மதிப்புக்குரிய வாசகர்களே!

உங்கள் அபிமான சஞ்சிகை அகரத்தின் விலை இம்மாத இதழிலிருந்து ரூபா. 40/= ஆகவும் உள்நாட்டுக்கான ஒரு வருட சந்தா ரூபா 700/= ஆகவும் அதிகரிக்கிறது.

அச்சுத்தாள், மின் கட்டணம், ஊழியர் சம்பளம், போக்குவரத்துச் செலவு ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள பாரிய விலை அதிகரிப் புக் காரணமாக அகரம் பிரதியொன்றின் விலையை இவ்வாறு அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

எனவே, வாசகர்கள் மற்றும் விற்பனை முக வர்களாகிய நீங்கள் இயல்பாகீ எழக்கூடிய இச்சூழ்நிலையைப் புரிந்து கொண்டு உங்கள் அபிமான சிறுவர் சஞ்சி கையின் விலை உயர்வை ஏற்றுக் கொண்டு தொடர்ந்தும் எமக்கு ஆதரவு அளிப்பீர்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

-முகாமைத்துவம்-

PUBLIC LIBRARY JAFFNA
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்து கொள்வோம்

- தேயிலை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம் எது? — தலவாக்கலை
- உலகில் மிக நீண்ட எல்லைகளைக் கொண்ட நாடு எது? — சீனா
- புத்தர் போதித்த மொழி எது? — பிராகிருதம்
- சத்திய சோதனை எனும் நூலை எழுதியவர்? — மகாத்மா காந்தி
- போர்த்துக்கல் நாட்டின் முதல் அரசர் யார்? — ஜோன்

எப்.எப். சபானா பிரவ்ஸ்,
அ/ மனாருல் உலூம் மு.ம.வி
கம்பிரிகஸ்வெவ

வானொலி



வானொலி ஒரு தொலைத் தொடர்பு சாதன மாகும். அனைத்து வீடுகளிலும் வானொலி தனக்கென ஓரிடத்தைப் பிடித்துள்ளது. வானொலியை இத்தாலி நாட்டவரான மார்க்கோனி 1896ல் கண்டுபிடித்தார். வானொலியில் செய்திகள், நிகழ்ச்சிகள், பாடல்கள், நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள் என்று பல நிகழ்ச்சிகளைக் கேட்கலாம். இன்று வானொலி பல்வேறு வகையில் பல்வேறு வடிவங்களில் உருவாக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் முதலிய மொழிகளில் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின்றன. உலகம் எங்கும் பல்வேறு வானொலி நிலையங்கள் உள்ளன. நமது நாட்டில் இலங்கை வானொலி (இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்), தனியார் வானொலிகள் என பல நிலையங்கள் செயற்படுகின்றன. இலங்கை வானொலி ஆசியாவிலே மிகப் பழைய வானொலி சேவையாகும். அது தொடங்கிய ஆண்டு 1925 ஆகும். தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக இக்காலத்தில் வானொலி தனது பழைய செல்வாக்கை இழந்து வருகின்றது.

எம்.டி.எப். அஸ்மா, தரம் 6
முஸ்லிம் மகளிர் கல்லூரி, பம்பலப்பிட்டி

தெரிந்து கொள்வோம்

திருக்குர்ஆனில் இடம்பெற்றிருக்கும் நபித் தோழரின் பெயர்
– ஸைத் பின் ஹாரிஸா

திருக்குர்ஆனில் இடம்பெற்றிருக்கும் பெண் மணியின் பெயர்
– மர்யம் (அலைஹிஸ்ஸலாம்)

திருக்குர்ஆனின் சட்டதிட்டங்களை முதலில் தொகுத்தவர்
– இமாம் ஷாபிஈ (ரஹிமஹுல்லாஹ்)

கடல் மார்க்க யுத்தத்தில் முதன் முதலாக ஷஹீதாக்கப்பட்ட வீரப் பெண்மணி
–உம்மு ஹறாம் பிந்த் மில்ஹான் அன்ஸாரிய்யா

அரபுலகத்தில் முதலில் வெளியிடப்பட்ட பத்திரிகை
– அல்கவாயிஉல் மிஸ்ரிய்யா

எஸ். இஸ்மத் பர்வின்,
பாத்திமா ஸஹ்ரா பெ.அ.க, ஒட்டமாவடி

பொதுத் தகவல்கள் சில...

- தற்போதைய சபாநாயகர் – சமல் ராஜபக்ஷ
- சிகரெட்டில் காணப்படும் இரசாயனப் பொருட்கள் – நிக்கோடின், தார், CO_2
- இலங்கையின் தேசிய கீதத்தைத் தமிழாக்கம் செய்தவர் – புலவர் நல்ல தம்பி
- சூரிய மண்டலத்தின் மிகப் பெரிய, மிகச் சிறிய கோள்கள் – பெரியது – வியாழன், சிறியது – புதன்
- ஹிப்போகிரேட்டிஸ் என்பவர் – மேலை நாட்டு மருத்துவத்தின் தந்தை
- ஆசியான் அமைப்பின் தலைமையகம் எங்கு உள்ளது? பெங்கோக் நகரில்
- உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைமையகம் எங்கு உள்ளது? ஜெனீவா நகரில்
- யுனெஸ்கோவின் தலைமையகம் உள்ள இடம் – பாரிஸ்

கஸ்மியா பயா, வாழைச்சேனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை

- இலங்கையில் உள்ள கல்வி வலயங்கள் - 96
- இலங்கையின் கல்வி அமைச்சர் - பந்துல குணவர்தன
- இலங்கையின் உயர் கல்வி அமைச்சர் - எஸ்.பி. திஸநாயக்க
- அரச பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர்கள் - 225,125
- பாடசாலைகள் - 10,488
- அரச பல்கலைக்கழகங்கள் - 15
- அரச பாடசாலைகள் - 9662
- பரீட்சை ஆணையாளர் - அநுர எதிரிசிங்க
- இலவசக் கல்வியை அறிமுகம் செய்த நாடு - நெதர்லாந்து
- இலங்கையின் மிக நீளமான தெரு - மட்டக்களப்பு- கொழும்பு
- சுதந்திர வர்த்தக நிலையம் அமைந்துள்ள இடம் - கட்டுநாயக்க
- நிலையான ஊற்று காணப்படும் இடம் - நிலாவரை
- நன்னீர் குளம் அமைந்துள்ள இடம் - கீரிமலை
- இலங்கையின் நீளமான கால்வாய் - பிடிகல கால்வாய்

பந்துல குணவர்தன

அநுர எதிரிசிங்க

கீரிமலை

நெதர்லாந்து தேசிய கொடி

எஸ்.எம். முஸாரப், பிறைந்துரைச்சேனை

உங்களுக்குத் தெரியுமா?

- உலகில் முதல் நாட்காட்டியை உருவாக்கியவர் - **ஜூலியஸ் சீஸர்**
- நாட்டின் பெயர் பொறிக்காது தபால் தலைகளை அச்சிடும் நாடு - **இங்கிலாந்து**
- பாலைவனம் இல்லாத கண்டம் - **ஐரோப்பா**
- பூக்கள் அதிகம் விளையும் நாடு - **நெதர்லாந்து**
- ISO தரச் சான்றிதழ் வழங்கும் நிறுவனத்தின் தலைமையகம் உள்ள நாடு - **ஜெனீவா**
- இந்தியா, பாகிஸ்தான் உரிமை கோரும் நிலப் பகுதி - **காஷ்மீர்**
- குடையைப் பார்த்து உருவான தொழிநுட்பக் கண்டுபிடிப்பு - **பரசூட்**
- தெற்காசிய நாடுகளில் காலனி ஆதிக்கத்திற்கு உட்படாத நாடு - **தாய்லாந்து**

ஏ.எல்.ஏ. ஸஹ்ரானி, மட்/ ஹிழ்றிய்யா வித்தியாலயம், காத்தான்குடி

ஐரோப்பியர் கண்டறிந்த புது உலகம்

பிறந்த தேசம்	நாடுகாண் பயணி	கண்டுபிடித்த நாடு
ஸ்பெய்ன்	கிறிஸ்டோபஸ் கொலம்பஸ்	கரீபியன் தீவுகள் (அமெரிக்கா)
இந்தியா	வாஸ்கொடகாமா	இந்தியா
போர்த்துக்கல்	ஹென்றி ஹட்சன்	ஹட்ஸன் குடா
போர்த்துக்கல்	பார்த்தலோமியஸ் டயஸ்	ஆபிரிக்காவின் தென்முனை
ஸ்பெய்ன்	பிரான்ஸிஸ்கோ பிஸாரோ	பெரு
இங்கிலாந்து	கெப்டன் ஜேம்ஸ் குக்	அவுஸ்திரேலியா
போர்த்துக்கல்	அல்வாரிஸ் கப்ரால்	பிரேசில்
ஸ்பெய்ன்	வஸ்கோஹியுனஸ் பெல்போவா	பனாமா கால்வாய்
ஸ்பெய்ன்	பெர்னான்டே கோடெஸ்	மெக்ஸிகோ
நோர்வே	றெட் எரிக் மற்றும் லிப் எரிக்சன்	நியூ பவுன்லாந்து

எம்.எப்.எப். பர்ஹானா, பாத்திமா பா.ம.வி, மூதூர்ஹமூல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகளும் விழாக்களும்

1வது	கடதாசி விழா
2வது	பஞ்சு/ பருத்தி விழா
3வது	தோல் விழா
4வது	புத்தக விழா
5வது	இரும்பு விழா
6வது	மர விழா
7வது	வெண்கல விழா
8வது	உபகரண விழா
9வது	பானை விழா
10வது	தகர விழா
11வது	உருக்கு விழா
12வது	பட்டு விழா
13வது	சரிகை விழா
14வது	தந்த விழா
15வது	படிக விழா
20வது	சீனக் களிமண் விழா
25வது	வெள்ளி விழா
30வது	முத்து விழா
35வது	பவள விழா
40வது	மாணிக்க விழா
45வது	இந்திர நீல விழா
50வது	பொன் விழா
55வது	மரகத விழா
60வது	வைர விழா
75வது	பவள விழா
80வது	அமுத விழா
100வது	நூற்றாண்டு/ தசர விழா

தாஜீர் ஹபீல் அஹமட், தரம் 11
கமு/சது/ அஸ்றப் ம.க. இறக்காமம்

இறைத்தூதர்கள் பற்றிய விபரம்

தாய் – தந்தை இல்லாமல் படைக்கப்பட்ட நபி

ஆதம் (அலைஹிஸ்ஸலாம்)

ஈஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களைப் போன்று வானத்திற்கு உயர்த்தப்பட்ட நபி

இத்ரீஸ் (அலைஹிஸ்ஸலாம்)

நூஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுடைய கப்பல் மலையில் தரை தட்டிய மாதம்

முஹர்ரம்

மனித இனத்தின் இரண்டாம் தந்தை என்றழைக்கப்பட்ட நபி

நூஹ் (அலைஹிஸ்ஸலாம்)

தன்னினச் சேர்க்கையில் ஈடுபட்ட கூட்டத்தார்

லூத் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் கூட்டத்தார்

இஸ்மாஈல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை குர்பான் கொடுக்க அழைத்துச் சென்ற இடம்?

மினா

அழகான தோற்றம் கொண்ட நபி

யூசுப் (அலைஹிஸ்ஸலாம்)

கடும் நோயினால் கஷ்டப்பட்ட நபி

ஐயூப் (அலைஹிஸ்ஸலாம்)

அழகான குரல் கொடுக்கப்பட்ட நபி

தாவூத் (அலைஹிஸ்ஸலாம்)

தொழுகையில் நின்ற நிலையில் மரணித்த நபி

ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்)

அறிவுக்கு விருந்து...

1951இற்கு முற்பட்ட காலத்தில் நுளம்புகளை அழிக்க D.D.T எனும் இரசாயனப் பொருள் பயன்படுத்தப்பட்டது. D.D.Tக்குத் தாக்குப் பிடிக்கக்கூடிய நுளம்புகள் உருவாகியுள்ளமை கண்டுபிடிக்கப்பட்ட. பின் இதற்குப் பதிலாக மலத்தியன் போன்ற வேறு இரசாயனப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் மண்ணில் காணப்படும் D.D.T அழிவடைய 30 வருடங்கள் செல்வதனால் மண்ணிலிருந்து தாவரங்கள் மூலம் உறிஞ்சப்பட்டு உணவுச் சங்கிலியினூடாக மனித உடலில் அதிகளவு D.D.T தேக்கமடையும். இதனால் இது அங்கிகளுக்குத் தீங்கு விளைவிக்கிறது.

எம்.எம். ஹிப்னி ரிஷாட்
பொலன்னறுவை மு.ம.க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸலாம் சொல்வோம்

அல்லாஹுத் தஆலா அல்குர்ஆனில், "உங்களுக்கு யாராவது வாழ்த்தி ஸலாம் சொன்னால் அதனை விட அழகாக வாழ்த்தி ஸலாம் சொல்லுங்கள். அதைப் போன்று பதில் அளியுங்கள்" என்று கூறுகிறான்.

ஸலாம் சொல்வது ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமுக்கு செய்ய வேண்டிய கடமையாகும். ஸலாம் சொல்வது சுன்னா; பதில் சொல்வது பர்ள் ஆகும். ஒரு மனிதன் எவ்வித சிக்கலுமின்றி சுவனம் நுழைவதற்கு சிறந்த வழிமுறை ஸலாம் ஆகும்.

ஒரு மனிதன் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் வந்து "இஸ்லாத்தில் சிறந்த விடயம் எது?" என வினவினார். அதற்கு நபியவர்கள், "நீங்கள் உணவு அளியுங்கள்; நீங்கள் அறிந்தவர்களுக்கும் அறியாதவர்களுக்கும் ஸலாம் சொல்லுங்கள்" என பதிலளித்தார்கள்.
(அல்புகாரி, முஸ்லிம்)

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள்: "நீங்கள் ஈமான் கொள்ளாதவரை சுவனம் நுழைய மாட்டீர்கள். பரஸ்பரம் அன்பு கொள்ளாதவரை ஈமான் கொள்ள மாட்டீர்கள்" என்று கூறிவிட்டு, "நான் ஒரு விடயத்தை சொல்லித் தருவேன். அதனை செய்தால் உங்கள் மத்தியில் பரஸ்பரம் அன்பு ஏற்படும். உங்கள் மத்தியில் ஸலாத்தைப் பரப்புங்கள்" என்றார்கள். (முஸ்லிம்)

நாம் ஸலாம் சொல்வது சிறந்ததும் நன்மையளிக்கக் கூடியதுமாகும். எனவே, அதனைப் பரப்புவோம்.

மாதம்பை எஸ். ஹஸன்
அமீனிய்யா அ.க.
நிகவெரட்டிய

அறிந்து கொள்ளுங்கள்

- வட்டி ஹராமாக்கப்பட்ட ஆண்டு எது? **ஹிஜ்ரி 10**
- நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் வளர்ப்பு மகன் யார்? **ஸைத் பின் ஹாரிஸா**
- நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ரமழான் நோன்பை எத்தனை ஆண்டுகள் நோற்றிருக்கிறார்கள்? **9 ஆண்டுகள்**
- உம்மு சுலைம் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களின் மகன் யார்? **அனஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள்**
- அன்னை ஹாஜர் நீர் தேடி அலைந்த மலைத் தொடரின் பெயர் என்ன? **ஸபா-மர்வா**
- ஸம் ஸம் நீரூற்றைக் கண்டு அங்கே குடியேறிய கோத்திரத்தினரது பெயரென்ன? **ஜுர்ஹும்**
- நபியவர்களின் மனைவியரில் கடைசியாக இறையடி சேர்ந்தவர் யார்? **உம்மு ஸல்மா**
- ஐரோப்பா கண்டத்தில் இருக்கும் முஸ்லிம் நாடு எது? **துருக்கி**
- மீம் எனும் எழுத்து ஒருமுறையேனும் வராத சூரா எது? **ஸூரதுல் கவ்ஸர்**

எம்.எப்.எப். பஸ்மினா, தரம்- 9
வெலம்பொட மு.ம.வி, வெலம்பொட

அறிய வேண்டியவை

கைத்தொழில் மற்றும் வணிக விவகார அமைச்சர்
- ரிஷாட் பதியுத்தீன்

இடர் முகாமைத்துவ அமைச்சர்
- ஏ.எச்.எம். பௌசி

போக்குவரத்து அமைச்சர்
- குமார வெல்கம

கல்வி அமைச்சர் - பந்துல குணவர்தன

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர்
- ஏ.எல்.எம். அதாவுல்லாஹ்

மீள் குடியேற்ற அமைச்சர்
- மில்ரோய் பெர்ணான்டோ

விவசாய அமைச்சர்
- மஹிந்த யாப்பா அபேவர்தன

சுகாதார அமைச்சர் - மைத்திரிபால சிரிசேன

வெளி விவகார அமைச்சர் - ஜீ.எல். பீரிஸ்

விளையாட்டுத் துறை அமைச்சர்
- சீ.பி. ரத்நாயக்க

எஸ்.எப். ஹஸ்மத் இஸ்ரத்
பொலன்னறுவை அல்ஹிலால் ம.க, தம்பாளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றாட வாழ்வில் அரபு மொழி

اللغة العربية

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி)

செயப்பாட்டு வினை اَلْفِعَلُ الْمَجْهُوْلُ

ஒரு வினைச் சொல் வாக்கியத்தில் ـُ வினைக் கர்த்தா அறியப்படாமல் வரும் வினை اَلْفِعَلُ الْمَجْهُوْلُ செயப்பாட்டு வினை எனப்படும்.

செயப்பாட்டு வினையமைப்புகளை இங்கு நோக்குவோம்.

1. இறந்தகால செயப்பாட்டு வினை فُعِلَ

இவ்வாறான வினைச் சொற்களின் ஆரம்ப எழுத்து ـُ ஆகவும் இரண்டாம் எழுத்து ـِ பெற்ற நிலையிலும் இறுதி எழுத்து ـَ அடையாளம் பெற்றும் வரும். விளக்கத்துக்காக சில உதாரணங்களை நோக்குவோம்.

● كَتَبَ என்ற செய்வினையை செயப்பாட்டு வினையாக மாற்றும்போது كُتِبَ என மாற்றம் பெறும்.

எழுதப்பட்டது அல்லது விதியாக்கப்பட்டது.	كُتِبَ
இந்தப் பாடம் எழுதப்பட்டது.	كُتِبَ هَذَا الدَّرْسُ
நோன்பு நோற்பது உங்கள் மீது கடமையாக்கப்பட்டுள்ளது.	كُتِبَ عَلَيْكُمْ الصِّيَامُ

திறக்கப்பட்டது فُتِحَ திறந்தான் فَتَحَ	கதவு திறக்கப்பட்டது.	فُتِحَ الْبَابُ
அறுக்கப்பட்டது ذُبِحَ அறுத்தான் ذَبَحَ	பசுமாடு அறுக்கப்பட்டது.	ذُبِحَتِ الْبَقَرَةُ
ஒன்று சேர்த்தான் جَمَعَ	முத்திரைகள் சேகரிக்கப்பட்டன.	جُمِعَتِ الطَّوَابِعُ

மாணவன் அநியாயமிழைக்கப்பட்டான்.	ظُلِمَ الطَّالِبُ

மேலுள்ள உதாரணங்களை நோக்கும்போது அவற்றில் உள்ள வினைச் சொற்களின் முதல் எழுத்து ـُ அடையாளத்தையும் இரண்டாம் எழுத்து ـِ அடையாளத்தையும் இறுதி எழுத்து ـَ அடையாளம் பெற்றதாகவும் வந்திருப்பதனை அவதானிக்க முடிகிறது.

2. நடு எழுத்து அலிப் ஆக வரக்கூடிய இறந்த கால வினைச் சொற்கள். இவ்வகை வினைச் சொற்களின் முதல் எழுத்து ـِ பெற்றதாகவும் இறுதி எழுத்து ـُ பெற்றும் வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லப்பட்டது.	قَالَ ← قِيْلَ
விற்கப்பட்டது.	بَاعَ ← بِيْعَ

கருத்துக்கள் சொல்லப்பட்டன. قِيْلَتِ الآرَاءُ

இந்த வீடு நேற்று விற்கப்பட்டது. بِيْعَ هَذَا البَيْتُ بِالأَمْسِ

قَالَ ← يَقُوْلُ
↓ ↓
قِيْلَ ← يُقَالُ

بَاعَ ← يَبِيْعُ
↓ ↓
بِيْعَ ← يُبَاعُ

மூன்று எழுத்துக்கள் கொண்ட இறந்த கால வினைச் சொல்லின் இறுதி இரண்டு எழுத்துக்களும் ـّـ பெற்று வரும்போது முதல் எழுத்து ـُـ பெற்ற நிலையிலும் இறுதி இரண்டு எழுத்துக்களும் ـَـ உடைய நிலையில் ـّـ பெற்றும் வரும்.

கீழ் உள்ள உதாரணங்களை அவதானியுங்கள்

நீட்டினான்	مَدَّ
இழுத்தான்	شَدَّ

எமக்கு உதவிக்கரம் நீட்டப்பட்டது. مُدَّتْ لَنَا يَدُ الْعَوْنِ وَالْمُسَاعَدَةِ

கயிறு இழுக்கப்பட்டது. شُدَّ الْحَبْلُ

இவ்வகை வினைகள் நிகழ்கால செயப்பாட்டு வினையாக வரும்போது பின்வரும் அமைப்பாக மாற்றமுறும்

مُدَّ يُمَدُّ

تُمَدُّ يَدُ الْعَوْنِ وَالْمُسَاعَدَةِ

شُدَّ يُشَدُّ

உதவி செய்தான்	نَصَرَ
உதவியளிக்கப்பட்டான்	نُصِرَ

نُصِرَ	يُنْصَرُ
نُصِرَا	يُنْصَرَانِ
نُصِرُوْا	يُنْصَرُوْنَ
نُصِرَتْ	تُنْصَرُ
نُصِرَتَا	تُنْصَرَانِ
نُصِرْنَ	يُنْصَرْنَ
نُصِرْتَ	تُنْصَرُ
نُصِرْتُمَا	تُنْصَرَانِ
نُصِرْتُمْ	تُنْصَرُوْنَ
نُصِرْتَ	تُنْصَرُوْنَ
نُصِرْتُمَا	تُنْصَرِيْنَ
نُصِرْتُنَّ	تُنْصَرْنَ
نُصِرْتُ	أُنْصَرُ
نُصِرْنَا	نُنْصَرُ

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I learn every day

Assalamu alaikum dear friends,

Do you know why we use a calendar? Of course to know the date. But there are numerous other uses of a calendar, too. Calendars were just wall hangers a few years before. But now, the trend is different. Calendars are programmed inside phones, watches, computers, and in many other gadgets. Why do we need this much calendars? Aren't they too much? No, friends, not at all. First of all, as students, you need your own calendar.



1. To plan your studies.
2. To plan your holidays
3. To plan the examinations

Once you plan

1. Mark them on your calendar.
2. Place your calendar where you can easily see it.
3. Circle the important events with a highlight marker.
4. Tell your mom about your plans, so that she, too , can co-operate.

Now it's up to you, to act on your plan!
Now look at Nuha's calendar.
Help Nuha by marking her events in the calendar

JUNE 2012

SUN	MON	TUE	WED	THU	FRI	SAT
					1	2
3	4	5	6	7	8	9
10	11	12	13	14	15	16
17	18	19	20	21	22	23
24	25	26	27	28	29	30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Write her name on the top

1st – Attend wapuma's home
5th- Math seminar
7th- Aysha's birth day
15th- Attend to the monthly Islamic lecture
16th- watch the special T.V programme about 'Dinosaurs'
18th- submit the science assignment
24th- help mom to wash the curtains

Ok friends, did you fill in the calendar? Now, plan a time table for her. Time tables are more detailed than calendars. Let's learn about them in future.

Look, what Nuha says ,

Thank you dear friends!

Can you describe about Nuha's activities?
Write down a paragraph, describing Nuha's activities.
Nuha will attend her wapuma's home on Friday, the 1sth of June. Then,
....
....
....

Your corner

Entries by mail

Do you know
That knowledge is the
Richest treasure
Anyone could have in life?
I believe that,
The only institution,
In which you can
Gain knowledge is school.
"Listen more, talk less,"
Is an old proverb
Do you believe in that too?
Of course, I do!
The more you listen,
you'll gain more knowledge
the more you talk,
You'll disturb everyone,
And gain nothing!



is power!

By : A.M.Fathima misna
Grade : 08
Mahmud ladies college, Ninthavur, Ampara

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA



Life Cycle of a Butterfly

- The butterfly lays eggs.
- The eggs become caterpillars.
- The caterpillar eats leaves.
- The caterpillar makes a cocoon.
- The cocoon breaks.
- A beautiful butterfly comes out.

Sumaiya Nowfer
Gr - 4
Naleem hajiar ladies college.



Prophet Muhammed (SAW)

Prophet Muhammed (PBUH) was a messenger of the almighty Allah. He always wanted to make peace among the people. Allah granted him special gifts to resolve conflicts and disputes. He took great care of his people's religious needs as well as economic needs. He served the society as a noble compassionate teacher and a reformer.

Mohamed Ansaf Ali,
BT/Hiluriya Vidyalaya
Kattankudy

Entries by post

Biography of mobile phones

This is a mobile phone. Fondly called the 'Mobile'. It transmits and receives signals through communication satellites from towers. Although it's expensive it serves the majority. It is movable and that's why it's called a mobile phone! Its functions are varied. It not only helps voice communication, but also sends and receives text messages called SMS. It also has a feature called the CLI , meaning caller line identification , that helps identity the caller and record the call with the time and date. In the event of a call being unattended, caller can leave a recorded message called the voice message. In addition, there are various other facilities depending on the types of phones

Ashhar Riska, Colombo

I'm eagerly waiting for your contributions with comments, stories poems and essays. The best ones will be published insha Allah.

So write to me at

I learn every day

A 61/5,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு 10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

கலாநிதி கே.எம்.எம். இக்பால்

10ம் தரம்

1. இலங்கைப் படத்தில் பின்வரும் இடங்களைக் குறித்து நிற்கும் இலக்கங்களைக் குறிப்பிடுக.
   a. ஜம்புகோளப் பட்டிணம்
   b. நல்லூர்
   c. திருகோணமலை
   d. மடு தேவாலயம்
   e. கந்தளாய்
   f. மிகிந்தலை
   g. கண்டி
   h. மகியங்கன
   i. சேருவில
   j. திரியாய்





2. மேலுள்ள உலகப் படத்தில் பின்வருவனவற்றைக் குறிக்கும் இலக்கங்களைத் தருக.
   a. செங்கடல்
   b. மத்தியதரைக் கடல்
   c. பாரசீக வளைகுடா
   d. மலாக்கா தொடுகடல்
   e. கருங்கடல்
   f. பிலிப்பைன்ஸ்
   g. ஒல்லாந்து
   h. மியன்மார்
   i. கம்பூச்சியா
   j. கிரேக்கம்

தரம் 10 - விடைகள்

1.		2.	
	a) 5		a) 2
	b) 3		b) 3
	c) 4		c) 1
	d) 1		d) 4
	e) 7		e) 6
	f) 6		f) 5
	g) 8		g) 8
	h) 9		h) 7
	i) 10		i) 10
	j) 2		j) 9

11ம் தரம்

i. பின்வரும் தகவல்களோடு தொடர்புடைய ஜப்பானியர்களைத் தருக.

A -ஜப்பானிய வரலாற்றில் சிரேஷ்ட மனிதராகக் கருதப்படுபவர்.

B - 1803இல் கிளர்ச்சிக்காரர்களை அடக்கியவர்.

C - கியோட்டோ பிரதேசத்தைக் கைப்பற்றி ஆட்சி அமைத்தவர்.

ii. இந்திய தேசிய காங்கிரஸின் நோக்கங்கள் 4 தருக.

iii. டொகுகாவா-சோகுன்களின் ஆட்சி ஜப்பானின் வளர்ச்சிக்கு வழிவகுத்த விதத்தை 2 உதாரணங் களுடன் விளக்குக.

iv. மேஜிஜி சீர்த்திருத்தம் ஜப்பானின் துரித முன்னேற்றத்திற்கு எவ்வாறு வழிவகுத்தது என்பதை 3 உதாரணங்களுடன் விளக்குக.

விடைகள்

i. A - ஹிதே யோசி B - டொகுகாவா இயாஷு
C - நொஷனகா

ii. a. இந்தியர்களிடம் நாட்டுப்பற்றை வளர்த்தல்.
b. பொதுசன அபிப்பிராயத்தைப் பெறுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

c. தேசியவாதத்தை வளர்த்தல்.

d. தேசிய அபிலாசைகளை பிரித்தானிய ஆட்சியாளர்களிடம் முன்வைத்தல்.

iii. வெளிநாட்டவரிடமிருந்து தொழில் நுட்பங்களைப் பெற்றுக் கொண்டமை

17ஆம் நூற்றாண்டில் ஜப்பானியர் வெளிநாட்டவரை வரவேற்றனர். இதனால் போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஐரோப்பியர், ஸ்பானியர் ஆகியோர் ஜப்பானுக்கு வந்தனர். வெளிநாட்டவரை ஜப்பானியர் வரவேற்றதற்கான காரணம் அவர்களிடமிருந்து தொழிநுட்பங்களைக் கற்றுக் கொள்வதாகும். உதாரணமாக போர்த்துக்கேயரிடமிருந்து சுடுபடைக் கலன்களைத் தயாரிக்கும் நுட்பத்தை அறிந்து கொண்டார்கள். பின்பு ஜப்பானியர் அதிகமான சுடுபடைக் கலன்களை உற்பத்தி செய்து, தமது படை பலத்தை அதிகரித்தனர்.

இறைவனின் ஏற்பாட்டிற்கிணங்க ஆட்சி நடைபெறுவதாக அறிவித்தமை

டொகுகாவா-சோகுன் ஆட்சியாளர்கள் தமது ஆட்சி, கடவுளின் ஏற்பாட்டிற்கிணங்கவே நடைபெறுகிறது என்று கூறினார்கள். இதன் காரணமாக மக்கள் அரசர்களுக்கு முழுமையமாகக் கீழ்ப்படிந்தனர். அரசனுக்குக் கீழ்ப்படிவதானது கடவுளுக்குக் கீழ்ப்படிவது, என்று மக்கள் கருதினார்கள். இதன் காரணமாக அரசனுக்கு எதிரான கலவரங்களோ புரட்சிகளோ இடம்பெறவில்லை. சோகுன்கள் 700 வருடங்கள் ஜப்பானை ஆட்சிசெய்ய முடிந்தமைக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

iv. அ. மானிய முறையை ஒழித்தமை

ஜப்பானின் முன்னேற்றத்திற்கு மானிய முறை அம்சங்கள் பெரும் தடைகளாக அமையும் என்று மேஜிஜி ஆட்சியாளர் கருதினர். மேஜிஜி பேரரசராக விளங்கிய முட்சிஹிதோ (1868-1912) அவர்கள் மானிய முறை அம்சங்களை அகற்ற பல நடவடிக்கைகளை எடுத்தார். நாட்டில் வர்த்தகப் பொருளாதாரத்தை அவர் கட்டியெழுப்பினார். சமூக, பொருளாதார, அறிவு சார்ந்த துறைகளில் பெரும் மாற்றங்களை பேரரசர் அறிமுகப்படுத்தினார். தொலைத் தொடர்புகள், தந்தித் தொடர்புகள், புகையிரதப் பாதைகள் என்பன அமைக்கப்பட்டதனால் மானியமுறை அம்சங்கள் படிப்படியாக மறைந்து 1871இல் மானிய முறை முற்றாக ஒழிக்கப்பட்டது.

ஆ. புதிய யாப்பு அறிமுகப்படுத்தியமை

நாட்டைத் துரிதமாக முன்னேற்ற பொருத்தமான யாப்பு அவசியம் என்று மேஜிஜி பேரரசர் கருதினார். இதனால் ஜேர்மனிய யாப்பை ஒத்த ஒரு புதிய யாப்பு ஜப்பானுக்காகத் தயாரிக்கப்பட்டது. அது 1889இல் பேரரசரால் பிரகடனப்படுத்தப்பட்டது. இந்த யாப்பு டயட் என்ற பாராளுமன்றத்தை அறிமுகப்படுத்தியது. இதில் இடம்பெற்ற பிரபுக்கள் சபையில் 500 பேரும் பிரதிநிதி சபையில் 300 பேரும் இடம் பெற்றனர். இந்த யாப்பு அடிப்படை உரிமைகளையும் மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமையையும் வழங்கியது. இதன் காரணமாக லிபரல் கட்சியும் முற்போக்குக் கட்சியும் வளர்ச்சியடைந்தன. எனவே, ஜப்பான் ஜனநாயக நாடாக வளர்ச்சியடைய புதிய யாப்பு காரணமாக அமைந்தது.

இ. கைத்தொழில் வளர்ச்சி

இன்று உலகில் முதன்மையான கைத்தொழில் நாடாக ஜப்பான் மாற மேஜிஜி சீர்த்திருத்தம் வழிவகுத்தது. போக்குவரத்து வலையமைப்பு, தொடர்பாடல் வசதிகள் முதலிய உட்கட்டமைப்பு வசதிகளை மேஜிஜி பேரரசர் ஏற்படுத்தியதால் கைத்தொழில் துரிதமாக வளர்ச்சியடைந்தது. புகழ்பெற்ற கைத்தொழில் நிறுவனங்களான மிட்சுய், மிட்சு பிசி முதலியன மேஜிஜி காலத்திலேயே தோன்றின. மிட்சுய் நிறுவனத்தை மிஸ்ட்ரை என்பவரும் மிட்சு பிஷி நிறுவனத்தை சத்சுமா என்பவரும் ஏற்படுத்தினார். 1930ஆம் ஆண்டளவில் 06 மில்லியன் தொழிலாளர்கள் கைத்தொழிற்சாலைகளில் பணிபுரிந்தனர். இவ்வாறு மேஜிஜி சீர்த்திருத்தத்தின் காரணமாக ஜப்பான் உலகில் சிறந்த கைத்தொழில் நாடாக மாறியது.

> ***விடாமுயற்சியுடன் வாழ்வது நம் கையிலேதான் உள்ளது. விடாமுயற்சி என்பது தொடங்கிய வேலையை முடிக்கும் உறுதியாகும். நாம் மிகுந்த சோர்வடையும்போது முயற்சியை விட்டுவிடுவது சுகமாகத்தான் தோன்றும். ஆனால், வெற்றியாளர்கள் சற்றும் சளைக்காமல் முயற்சியைத் தொடருவர்.***
>
> ***ஷிவ் கெரா***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்ப்புக்களை சுமந்து வரும் ஒலிம்பிக் 2012

LONDON 2012

■ ஏ.எச். றகீப் ■

இன்று உலகளவில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன. அவற்றில் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியானது மிகப் புராதனமானதும் முக்கியமானதுமாகும். அனைத்து உலக நாடுகளின் பங்கேற்புடன் 4 வருடங்களுக்கு ஒரு முறை இப் போட்டிகள் நடைபெறுகின்றன.

ஒலிம்பிக் போட்டியானது ஆரம்ப காலத்தில் சமயத் திருவிழாவாக கி.மு 776 தொடக்கம் கி.பி. 393 வரைக்கும் கொண்டாடப்பட்டு வந்தது. கி.மு 776இல் கிரீஸ் நாட்டின் ஒலிம்பியா நகரில் தொடங்கியதால் இப்போட்டிக்கு ஒலிம்பிக் எனும் பெயர் சூட்டப்பட்டது. இருப்பினும் கி.பி. 393 இல் அப்போதைய கிரேக்க மன்னன் தியோடிஹேசில் இது சமயத்திற்கு முரணானது எனக் கருதி தடைவிதித்தான். பின்னர் பிரெஞ்ச் நாட்டு பேரரசர் பரோன் பெரி டி கூபர்டின் ஒலிம்பிக் போட்டியை நடத்துமாறு முன்வைத்த கருத்தை ஏற்று கிரிஸ் நாட்டு பேரரசர் முதலாம் ஜார்ஜ் மீண்டும் 1896 ஏப்ரல் 06 திகதி மீள் ஆரம்பம் செய்தார். இதில் கிரீஸ் நாடு 47 பதக்கங்கள் வென்று முதலிடத்தைப் பெற்றது.

இந்த வரலாற்றுப் பின்னணியோடு எதிர்வரும் 2012.07.27 ஆம் திகதி நடைபெறவுள்ள 27 ஆவது ஒலிம்பிக் நிகழ்வுகள் பற்றிய தகவல்களைப் பார்ப்போம்.

எதிர்வரும் ஒலிம்பிக் போட்டியானது ஐரோப்பா கண்டத்தில் அமைந்துள்ள இங்கிலாந்து நாட்டின் லண்டன் மாநகரில் நடைபெறவுள்ளது. இதற்கு முன்னர் இங்கிலாந்தில் 1908, 1948 ஆம் ஆண்டுகளில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றன. இவ்வகையில் இங்கிலாந்து உலகின் அதிகமான தடவை ஒலிம்பிக் போட்டியை நடத்தியோர் வரிசையில் அமெரிக்காவுக்கு அடுத்ததாக இரண்டாம் இடத்தைப் பெறுகிறது. அமெரிக்கா 1904, 1932, 1984, 1996, ஆண்டுகளில் நடத்தி முதலிடத்தை வகிக்கிறது.

"Inspire a Generation" எனும் கருப்பொருளோடு லண்டனில் நடைபெறவுள்ள 27ஆவது ஒலிம்பிக் போட்டி, எதிர்வரும் 2012.07.27 முதல் 2012.08.12 வரை 15 நாட்கள் நடைபெறவிருக்கிறது.

14,700 போட்டியாளர்கள் எதிர்வரும் ஒலிம்பிக் போட்டிகளினால் கலந்து கொள்ளவுள்ளார்கள். 26 விளையாட்டுக்களில் இருந்து 302 போட்டிகள் நடைபெறவுள்ளன. நிகழ்ச்சி விபரம் வருமாறு:

- ✦ தடகள விளையாட்டு - 47
- ✦ தற்காப்பு - 56
- ✦ சீருடற் பயிற்சிகள் - 18
- ✦ கருவி விளையாட்டு - 50
- ✦ நீர் விளையாட்டு - 46
- ✦ குழு விளையாட்டு - 27
- ✦ ஊர்தி ஓட்டம் - 59

ஆரம்ப நிகழ்வுகளில் 20,000 கலைஞர்கள் பங்கேற்கவுள்ள தொடக்க நிகழ்வுகளை ஸ்லம்டோக் மில்லியனர் திரைப்பட இயக்குனர் டொனி பயால் இயக்குகிறார். இந் நிகழ்வுகளில் ஷேக்ஸ்பியரின் "தி டெம்பஸ்ட்" நாடகத்தை மையமாக வைத்த இசை நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது. இந் நிகழ்வுகள் யாவும் 2012.07.27 புதன்கிழமை ஒலிம்பிக் மைதானத்தில் நடைபெறும்.

(43ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையறை தாண்டி சிந்தித்தல்

Out of box Thinking





ஜே.எம். அஸீம்

எந்தவொன்றுக்கும் இந்த வரையறைக் குள்தான் தீர்வு என பலர் நினைத்துக் கொண்டிருக்கும்போது அந்த வரையறைக ளுக்கு வெளியே சிந்தித்துத் தீர்வு கண்டவர்கள் பலர். கைத்தொலைபேசி என்றால் தொலைபேசி நிறைய பட்டன்கள் நிறைந்திருக்க வேண்டும் என அனைவ ரும் கனவு கண்டு கொண்டிருந்தபோது ஒரு பட்டனை வைத்து தொலைபேசியை இயக்க கனவு கண்டவர் தான் ஸ்டீவ் ஜொப்ஸ்.

யானையின் நிறையை கணித்துச் சொல்ல வேண்டும் என்று விஞ்ஞானி ஆர்க்கிமிடிஸுக்கு கட்டளையிட்டான் அரசன். யானையின் நிறையை அளப்பதா? இது சாத்தியமா? அவ்வளவு பிரமாண் டமான தராசை யார் செய்வது? தராசு உடைந்தால் யார் பதில் சொல்வது? வேறு என்னதான் செய்வது? அடுக்கடுக்கான வினாக்கள் அவரது மண்டையைப் போட்டு குடைந்து எடுத்தன. தூக்கம் இல்லை, பசி இல்லை, நிம்மதி இல்லை... அனைத்தையும் தொலைத்துவிட்டு அதனையே சிந்தித்துக் கொண்டி ருந்தார்.

அந்த சிந்தனையோடு குளியலறைக்குச் சென்றவர் குளியல் தொட்டியில் ஏறியதும் சர சரவென்று நீர் கீழே கொட்டியது. திடீரென சிந்தனை வேறெங்கோ சுழன்றது. "யுரேகா... யுரேகா... யானையை அளக்கத் திட்டம் தயாராகிவிட்டது" என்று கத்திக்கொண்டு ஓடினர். தான் மூழ்கியபோது குறிப்பிட்டளவு நீர் வெளியாவதை வைத்து அவர் யானையை அளக்கும் முறையைக் கண்டறிந்து விட்டார்.

யானையை கப்பலில் ஏற்றி கடலில் சென்றபோது கப்பல் மூழ்கிய அளவை வைத்து அந்தளவு மண்ணை கப்பலில் நிரப்பி பின்னர் அந்த மண்ணை நிறுத்து யானையின் அளவைக் கணிப்பிடுவதுதான் அந்த யுக்தி. யானையை எப்படி நிறுப்பது என்று யோசித்தவருக்கு மாற்றி யோசித்தபோது தோன்றிய ஐடியாவே இது.

இப்படி நாங்களும் மாற்றி யோசித்து புதிய புதிய ஐடியாக்களைப் பெறலாம். அந்த ஐடியாக்கள் வேறு எங்கும் இல்லை. எமது மூளைக்குள்தான் ஒளிந்து கொண்டிருக்கின்றன. உங்கள் மூளைக்குள் எப்படிப் பட்ட மேதை புதைந்திருக்கிறாரோ!

நோய்களுக்கு மருந்துண்டு என்ற கோட்பாடுதான் மருத்துவத் துறையில் மகத்தான சாதனை புரிய வழிவகுத்திருக்கிறது. அதேபோல் பிரச்சினைக்குத் தீர்வுண்டு என்ற கோட்பாடுதான் புரட்சிகளை ஏற்படுத்தி புத்தம் புதிய வழிகளைத் திறந்து விட் டுள்ளது.

சோனி நிறுவனம் முதன் முதலில் வோக்மேன் சீரிஸை வெளியிட்டபோது அதற்கு ஒரு விமரிசனம் வந்தது. யாராவது காதில்போட்டுக் கொண்டு பாட்டுக் கேட்பார்களா என்று விமர்சித்த அந்த ஆளை தனது நிறுவனத்தில் பணிக்கமர்த்தினார் சோனி நிறுவனத்தின் உரிமையாளர். நாமென்றால் விமர்சிப்பவர்களை வெறுப்போடுதானே பார்த்திருப் போம். விமர்சிக்கும் அவரிடம் விஷயம் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகளுக்குத் தீர்வு உள்ளேயா? வெளியேயா?

நாம் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வை அதனைச் சுற்றியே தேடுபவர்களாக இருந்தால் எப்போதும் ஒரே மாதிரி சிந்திப்பவர்களாகவும் ஒரே தீர்வுகளில் நாட்டம் கொண்டவர்களாகவுமே இருப்போம். இதனை Stereo Type Thinking என்பார்கள்.

தீர்வுகள் உள்ளேயோ அல்லது வெளியேயோ இருக்கலாம். உள்ளே உள்ள தீர்வுகளை விட வெளியே உள்ள தீர்வுகள் சிறந்ததாக இருக்கலாம். என்ன உள்ளே, வெளியே என்று யோசிக்கிறீர்களா?

ஒரு பிரச்சினைக்கு இன்ன இன்ன மாதிரித்தான் தீர்வுகள் வரும், இன்ன இன்ன வரையறைக்குள்தான் தீர்வுகள் அமையும் என எமக்கு நாமே இட்டுக் கொண்ட வரையறைக்குள் நின்று அனைவரும் சிந்திப்பது போல சிந்திப்பது உள்ளே எனப்படும். பிரச்சினைக்கு அப்பால் பலரும் அவ்வாறு தீர்வு பெற முடியாதென்று மூட்டைகட்டிவிட்ட பகுதிகளிலிருந்து நாம் தீர்வு தேடும்போது அது வெளியே எனப்படும்.

கண்ணினால் மனிதன் பார்க்கிறான் என மனிதன் நினைத்தபோது உலகம் தூங்கிக் கொண்டது. ஒளியினால் மனிதன் பார்க்கிறான் என்பதை மனிதன் அறிந்தபோது உலகம் விழித்துக் கொண்டது. சிலர் ஹோட்டலில் உணவருந்திவிட்டு டிப்ஸ் கொடுப்பது தன்னைப் பணியாள் நன்றாகக் கவனித்தார் என்பதற்காகவல்ல; மறுமுறை நன்றாகக் கவனிக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

வரையறை தாண்டி சிந்திக்கப் பயிற்சி பெறுங்கள்

அப்பிள் கீழே விழுவதை சாதாரண நிகழ்வாகப் பார்க்காமல் ஏன் மேலே செல்லவில்லை என்று மாற்றி யோசித்த நியூட்டன் புவியீர்ப்பு விதியைக் கண்டுபிடித்தார்.

சிலர் நேர்மறை சிந்தனையோடு இதனைக் குழப்பிக் கொள்கிறார்கள். நேர்மறைச் சிந்தனை என்பது நிகழ்வுகளிலுள்ள நல்ல பகுதிகளைப் பார்ப்பது. வரையறை தாண்டி சிந்திப்பது என்பது நாம் சிந்திக்க மறந்த மற்றைய பகுதி -அது எதிர்மறைப் பகுதியாகக்கூட இருக்கலாம்- பற்றி சிந்திப்பது. ஒரே மாதிரி சிந்திக்காமல் வேறு மாதிரி சிந்திப்பது. ஏனெனில், நாம் தேடும் பிரச்சினையின் தீர்வு மற்றைய பகுதிக்குள் மறைந்திருக்கலாம். அதனைக் கண்டறிய சிந்திப்பதே வரையறை தாண்டி சிந்திப்பது ஆகும்.

வரையறை தாண்டி சிந்திப்பது வித்தியாசமாக சிந்திப்பதன் ஒரு வழிமுறைதான். மூளைக்கு கடுமையான பயிற்சிகளை வழங்குவதன் மூலம் இதனை பழக்கப்படுத்திக் கொள்ளலாம். பல்வேறு கண்டுபிடிப்புகளுக்கு வழிகோலியது இவ்வாறு வரையறை தாண்டி சிந்தித்ததுதான். காரணம், அந்த வரையறை இயற்கையானதல்ல. மாறாக, நாம் இட்டுக் கொண்டதாகவே அது காணப்படுகின்றது.

வரையறை தாண்டி சிந்திப்பதன் மூலம் புதிய புதிய ஐடியாக்களைப் பெறலாம். மற்றவர்களிடமிருந்து வித்தியாசப்படலாம். சுலபமான வழிகளையும் இலகுவான தீர்வுகளையும் பெற்றுக் கொள்ளலாம். புதிது புதிதாகக் கற்றுக் கொள்ளலாம்.

ரிச்சர்ட் பிளெச்னிடென் *1904* இல் செண்ட் லூயிஸ் உலகக் கண்காட்சியில் இந்தியத் தேநீரின் விற்பனையை மேம்படுத்த எண்ணினார். மிகவும் சூடாக இருந்ததால் அவரது தேநீரை யாருமே மாதிரிக்குக்கூட குடித்துப் பார்க்க விரும்பவில்லை. அவரது கவனத்தை ஈர்த்தது தனது தேநீர் தவிர மற்ற எல்லா குளிர்பானங்களும் அமோக விற்பனையாகிக் கொண்டிருந்த விடயம். சூட்டைக் குளிராக்க நினைத்தார். சுடுநீருக்குப் பதில் குளிர் நீர். சூடான தேநீக்குப் பதில் குளிர் தேநீர். விற்பனையில் தோற்றது சூடான தேநீர். குளிர் தேநீர் விற்பனையோ சூடாக நடந்தது. மாற்றி யோசித்தார். சூடான நீர் என்ற வரையறை தாண்டி சிந்தித்தார். பிரச்சினை தீர்ந்தது. விற்பனையும் இலாபமளித்தது.

எதிர்ப்பக்கத்தை சிந்தியுங்கள் (Think the opposite side)

அப்பிள் ஏன் கீழே விழ வேண்டும்; மேலே செல்லவில்லை? கடிகாரம் ஏன் வலப்பக்கம் சுற்ற வேண்டும்; இடப்பக்கம் சுற்றக்கூடாது? என்று எந்தவொன்றினதும் எதிர்ப்பக்கத்தைச் சிந்தியுங்கள். எதிர்ப்பக்கத்தை சிந்திப்பது புதிய சிந்தனைகளை வரவழைக்கும். தடைகள் தாண்டி சிந்திக்கச் செய்யும்.

நீங்கள் வலது கையால் எழுதுபவராக இருந்தால் இடது கையாலும் எழுதிப் பழகுங்கள். ஏனெனில் வலது கையால் எழுதும்போது இடது பக்க மூளையே அதிகம் வேலை செய்கிறது. இடது கையால் எழுதும்போது உங்கள் மூளையின் வேலை செய்யாத வலது பகுதி புதிதாக இயங்க ஆரம்பிக்கின்றது. அப்போது உங்களுக்கு முன்னர் தோன்றாத புதிய புதிய ஐடியாக்கள் தோன்றும்.

எழுதுவது மாத்திரமல்ல, நீங்கள் இதுவரை செய்யாத புதிய வேலையை செய்தாலும் நீங்கள் வரையறை தாண்டி சிந்திப்பதற்குப் பயிற்சி பெறலாம். ஏனெனில், நீங்கள் இதுவரை செய்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY JAFFNA

வேலைகளைச் சுற்றியே உங்கள் சிந்தனை சுழன்று கொண்டிருக்கும். புதிய வேலை செய்யும்போது புதிய சூழல், புதிய அனுபவம் புதிய சிந்தனைகளுக்கு வழிகோலும்.

எந்த நிகழ்வையும் மாற்றி யோசிக்கப் பழகுங்கள்

1914இல் தனது 67வது வயதில் தோமஸ் அல்வா எடிசன் கோடிக்கணக்கான டொலர்கள் மதிப்புள்ள தனது தொழிற்சாலையைத் தீயில் இழந்தார். வயதான மனிதரான எடிசன் தனது வாழ்நாள் முயற்சியெல்லாம் தீயில் பொசுங்கிப் போவதைப் பார்த்துக் கொண்டே கூறினார்: "நமது எல்லாத் தவறுகளும் பொசுங்கிவிட்டன. இனி நாம் புதிதாக எதையும் தொடங்கலாம்."

பேரிழப்பு ஏற்பட்டு 03 வாரங்களின் பின் அவர் ஒலிப்பதிவுக் கருவியைக் கண்டுபிடித்தார். அன்று அவர் எனது வாழ்நாள் முதலீடெல்லாம் அழிந்து விட்டதே என சிந்தித்திருந்தால்...

ஒரு வாயில் மூடப்பட்டால் பல வாயில்கள் திறந்து கொள்ளும்

எந்த ஒன்றுக்கும் ஒரு தீர்வல்ல பல தீர்வுகள் உண்டு என்ற உண்மையை நீங்கள் மனதரா ஏற்று நம்ப வேண்டும். அந்த நம்பிக்கைதான் உங்களுக்கு தீர்வுகளை அள்ளி வழங்கும். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) பல்வேறு சந்தர்ப்பங்களில் மாற்று வழிகளையும் மாற்று வழிமுறைகளையும் நாடியுள்ளார்கள். மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் செல்லும்போது வழமையாக செல்லும் பாதையைத் தெரிவு செய்யாமல் மாற்று வழியைத் தெரிவு செய்தார்கள். அஹ்ஸாப் யுத்தத்தின்போது வழமையான யுத்த வியூகத்தைக் கையாளாமல் மாற்று வழிமுறையைக் கையாண்டு மதீனாவைச் சூழ அகழி தோண்டினார்கள்.

பல கோணங்களில் சிந்திக்கும்போது பல தீர்வுகள் கிடைக்கும், பல யோசனைகள் பிறக்கும் என்ற நம் பிக்கை தீர்வுகளை அல்ல; தீர்வுப் பொதிகளையே வழங்கும்.

ஒன்றை விடச் சிறந்த ஒன்றைக் கற்பனை பண்ணுங்கள்

சிலபோது உங்கள் சிந்தனைக்கு ஒரு ஐடியா தோன்றலாம். ஆனாலும், அதனை விடச் சிறந்த ஐடியா உள்ளது என்ற யதார்த்தத்தை மறந்து விட வேண்டாம். கம்யூட்டர் உலகில் தாங்கள்தான் ஜாம்பவான்கள் என நினைத்துக் கொண்டிருந்த மைக்ரோசொப்ட் ஒபரேடிங் சிஸ்டத்தை தகர்த்தெறிந்து முன்னேறியது அப்பிளின் ஒபரேடிங் சிஸ்டம். எதையும் கொடுக்கத் தயங்கும் தொழிநுட்ப உலகில் எல்லாவற்றையும் அள்ளி வழங்கியது அப்பிள். ஒன்றை விட சிறந்த ஒன்றைக் கற்பனை பண்ணிய அப்பிள்தான் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக முழுத் தொடர்பாடல், தொழிநுட்ப உலகையும் ஆக்கிரமித்தது.

ஒன்றை விட சிறந்த ஒன்று உள்ளது என்ற நம்பிக்கைதான் சிறந்த ஐடியாக்களுக்கு வழிகோலும். தடைகள் தாண்டி சிந்திக்கச் செய்யும். விலங்குகளை உடைத்தெறியும். சிந்தனைச் சிறைகளை உடைத்தெறிந்து சிறகுகளை விரிக்கச் செய்யும்.

தவறுகள் செய்யுங்கள் (Making Mistakes)

கண்டுபிடிப்புகளில் பல தவறுகளால் விளைந்தவையே. எனவே, தவறுகள் உங்களை அழித்து விடாது என்பதையும் புதிய சிந்தனைக்கும் கற்பனைக்கும் கண்டுபிடிப்புக்கும் வழிகோலும் என்பதையும் மறந்து விடாதீர்கள். தவறுகள் செய்வது புதிய விடயங்களைக் கற்பதற்கு வழிகோலும். புதிய விடயங்களைக் கற்பது புதிய சிந்தனைக்கும் தடை தாண்டி சிந்திப்பதற்கும் உதவும்.

தவறு செய்வது என்பதை பாவம் செய்வதாகவோ, பொய் சொல்வதாகவோ, வஞ்சிப்பதாகவோ, ஏமாற்றுவதாகவோ யாரும் தவறாக அர்த்தம் கொள்ளக் கூடாது. தவறு என்பது தவறுதலாக நடைபெறுவது. உங்கள் பலவீனம், ஏன் பலம் கூட அதற்குக் காரணமாக இருக்கலாம்.

அடிக்கடி மாற்றங்கள் செய்யுங்கள்

உங்கள் இடத்தை மாற்றுங்கள். உங்கள் சூழலை மாற்றிக் கட்டமையுங்கள். பொருட்களை இடமாற்றி ஒழுங்குபடுத்துங்கள். நீங்கள் உபயோகிக்கும் பொருட்களை மாற்றுங்கள். உங்கள் கையெழுத்து முறையை மாற்றிப் பாருங்கள். உங்கள் உணவுப் பழக்கத்தை மாற்றிப் பழகுங்கள். பொழுது போக்கு அம்சத்தை மாற்றுங்கள். வாசிக்கும் புத்தகங்களின் வகைகளை மாற்றுங்கள். புதிய இடங்களுக்கு விஜயம் செய்யுங்கள். புதிய நண்பர்களுடன் பழகிப் பாருங்கள். உங்கள் செயல் முறைகளை மாற்ற முயலுங்கள். மாற்று வழிகளைக் கையாளப் பழகுங்கள். மற்றைய மொழிகளைக் கற்றுப் பாருங்கள். உங்களுக்கு பிறர் உதவ வேண்டும் என எதிர்பார்க்கும் நீங்கள் மற்றவர்களுக்கு உதவிப் பாருங்கள். மொத்தத்தில் நீங்கள் யாராக இருந்தீர்களோ அதிலிருந்து மாறிப் பாருங்கள். மாற்றத்திற்கு உட்படக்கூடியவராகவும் மாற்றங்களை ஏற்கக் கூடியவராகவும் நீங்கள் இருந்தால்தான் உங்களால் மாற்றி யோசிக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் 18 வளைவுகள் வீதி



இலங்கையில் '18 வளைவுகள்' என அழைக்கப்படும் வீதி புனரமைக்கப்பட்டு 2012 மே மாதம் ஜனாதிபதியால் திறந்து வைக்கப் பட்டது. A26 என அழைக்கப்படும் இவ் வீதி கண்டியையும் மஹியங்கனையையும் இணைக்கிறது. இவ் வீதியின் தூரம் 75 கிலோ மீற்றர்கள் ஆகும். இவ் வீதிப் புனரமைப்புப் பணி 5200 மில்லியன் ரூபா செலவில் 2008ஆம் ஆண்டு வீதி அபிவிருத்தி அமைச்சினால் ஆரம்பிக்கப் பட்டது.

World Today



திரு. பீ. உமா சங்கர்,
B.Com (Jaf), M.Com (Kelaniya) (R) Spl.Trd.Com,
NDBF, Sri Lanka Technical College - Colombo

2012ஆம் ஆண்டின் சந்திரன்

மிகப் பெரியதும் பிரகாசமானதுமான பூரண சந்திரன் 2012 மே மாதத்தில் தோன்றியது. இதன்போது சந்திரனானது பூமியில் இருந்து 356,400 கிலோ மீற்றர் தூரத்திலும் வழமையாக தோன்றும் சந்திரனை விட 14 சத வீதம் பெரிய தாகவும் 30 சதவீதம் அதிக பிரகாசமானதாகவும் காணப்பட்டது.

கப்ருக



தெங்குப் பொருள் உற்பத்திகளில் ஈடுபட்டுள்ளோருக்காகவும் தென்னை உற்பத்தி துறையில் பங்கெடுக்க விரும்புவோருக்காகவும் அவ் உற்பத்தி மூலமாக தேசிய பொருளாதாரத்தை பலப்படுத்தும் திட்டமாக 2012 மே மாதம் இது ஆரம்பிக் கப்பட்டது.

றொபேட் ஸ்கூமன்



ஐரோப்பிய ஒன்றியம்

இது அங்கத்துவ நாடுகளுக்கிடையே பொதுச் சந்தை முறை, பொது நாணயம், பொதுப் பாராளுமன்றம் என்பவற்றை அமுலாக்குதல், ஐரோப்பிய மத்திய வங்கி, நிலையான அபிவிருத்தி என்பவற்றை இலக்காகக் கொண்டு 1951இல் பிரசல்ஸ்ஸை தலைமையகமாகக் கொண்டு ஆரம்பிக்கப் பட்டது.

முதலாவது ஐரோப்பிய தினமானது 1950.05.09 இல் பிரான்ஸ் வெளிவிகார அமைச்சர் றொபேட் ஸ்கூமன் Robert Schuman என்பவரால் அறிமுகப் படுத்தப்பட்டதைத் தொடர்ந்து வருடாந்தம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. தற்போது ஐரோப்பிய ஒன்றியமானது இருபத்தேழு அங்கத்துவ நாடுகளையும் 500 மில்லியன் மக்களையும் கொண்டு விளங்குகின்றது. 28வது உறுப்பு நாடாக 2013.07.01இல் குரேஷியா அங்கத்துவம் பெறவுள்ளது. மேலும் 1973ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட கூட்டுறவு உடன்படிக்கையின் பின்னர் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு ஆரம்பிக் கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு	அங்கத்துவம் பெற்ற நாடுகள்
1951	பெல்ஜியம், பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, லக்ஸம்பேர்க், நெதர்லாந்து, டென்மார்க், அயர்லாந்து
1973	பிரித்தானியா
1981	கிரேக்கம்
1986	ஸ்பெய்ன், போர்த்துக்கல்
1995	ஒஸ்டிரியா, பின்லாந்து, சுவீடன்
2004	சைப்பிரஸ், செக் குடியரசு, எஸ்ரோனியா, ஹங்கேரி, லட்வியா, லித்துவேனியா, மோல்டா, போலந்து,
2007	பல்கேரியா, ரோமானியா
2013	குரேஷியா (அங்கத்துவம் பெறவுள்ளது)

ஐரோப்பிய ஒன்றிய இலச்சினையானது பன்னிரண்டு தங்க நிறத்திலான நட்சத்திரங்கள் வட்ட வடிவமாக அமைக்கப்பட்டுள்ளது. இது ஐரோப்பிய மக்களுக்கிடையில் ஒற்றுமையையும் இணக்கத்தையும் வெளிப்படுத்துகின்றது.

ஐரோப்பிய ஒன்றிய வாசகம் "வேற்றுமையிலும் ஒற்றுமை" என்பதைக் குறித்து நிற்கிறது. ஐரோப்பிய ஒன்றிய கீதமானது 1823இல் லுட்விக் வான் பீத்தோவன் (Ludwig Van Beethovan) என்பவரால் இசை அமைக்கப்பட்டு 1985இல் இசைக்க ஆரம்பிக்கப்பட்டது.

ஐரோப்பிய நாடுகளுக்கென அறிமுகப்படுத்தப்பட்ட பொது நாணயமான யூரோ பதினேழு உறுப்பு நாடுகளில் பாவனையில் இருப்பதுடன் பல்கேரியா, செக் குடியரசு, டென்மார்க், லட்வியா, லிதுவேனியா, ஹங்கேரி, போலந்து, ரோமானியா, சுவீடன், பிரித்தானியா ஆகிய பத்து நாடுகளில் இதுவரை பயன்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஒட்டுமொத்த உலகப் பொருளாதாரத்தின் மூன்றில் ஒரு பங்கினை ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகள் கொண்டுள்ளன.

பிரான்ஸின் புதிய ஜனாதிபதி

புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக 2012 ஏப்ரல் மாதம் பிரான்ஸில் நடைபெற்ற முதலாம் சுற்று ஜனாதிபதித் தேர்தலில் இதுவரை காலமும் ஜனாதிபதியாக விளங்கிய நிகொலஸ் சார்கோலி (Nicolas Sarkozy) 27.1% வாக்குகளையும், பிரதான போட்டி வேட்பாளரான சோசலிச கட்சியை சேர்ந்த, பிரான்கொயிஸ் ஹொலன்ட் (Francois Hollande) 28.6% வாக்குகளையும் பெற்றுக் கொண்டனர். 50%ற்கு அதிகமான வாக்குகளை எவரும் பெற்றுக் கொள்ளாமையினால் இரண்டாம் சுற்றுத் தேர்தல் 2012 மே மாதம் நடைபெற்றது. இதிர் பிரான்கொயிஸ் ஹொலன்ட் 51.67% வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியானார்.

இதன் பிரகாரம் ஏற்கனவே ஜனாதிபதியாக பதவி வகிக்கும் ஒருவர் முதலிடத்தைக் கைப்பற்ற முடியாது போனமை இதுவே முதல் தடவை ஆகும். பிரான்ஸ் ஜனாதிபதி பதவிக் காலமானது ஐந்து வருடங்களைக் கொண்டதாகும்.

கோப் அறிக்கை

அரச திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களான பொது நிறுவனங்களின் நிதி ஒழுங்குகளை ஆராய்வதற்கென 1979.01.26 இல் உருவாக்கப்பட்டதே கோப் குழுவாகும். இதன் தலைவர் டியூ குணசேகர ஆவார். 2011 டிசம்பரில் 249 அரச துறை நிறுவனங்களை ஆய்வு செய்து வழங்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் 40 நிறுவனங்கள் நட்டத்தில் இயங்குவதாக இணங்கானப்பட்டுள்ளது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மொழியும் இலக்கியமும்

ஆசிரியர்: நுஸ்ரா நிசாம்தீன் BA (Hons) PGDE

10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

தமிழ் இலக்கணம்– சார்பெழுத்துக்கள்

மாணவர்களே! இலக்கணப் பகுதியை மறந்திட வேண்டாம். இனி, சார்பெழுத்துக்கள், வேற்றுமை எனும் பகுதிகளைக் கற்கத் தயாராகுங்கள்.

சார்பெழுத்துக்கள்

வினா 01: சார்பெழுத்துக்கள் எத்தனை வகை? அவை யாவை? மாத்திரை அளவுகளையும் தருக.

விடை: 10 வகை

1. ➡	உயிர் மெய்	(1 அல்லது 2)
2. ➡	குற்றியலுகரம்	(1/2)
3. ➡	குற்றியலிகரம்	(1/2)
4. ➡	ஐகாரக் குறுக்கம்	(1)
5. ➡	ஔகாரக் குறுக்கம்	(1)
6. ➡	மகரக் குறுக்கம்	(1/4)
7. ➡	ஆய்தக் குறுக்கம்	(1/4)
8. ➡	முற்றாய்தம்	(1/2)
9. ➡	உயிரளபெடை	(3)
10. ➡	ஒற்றளபெடை	(1)

> குறிப்பு:
> உயிர் மெய் குறில்-1 உயிர் மெய் நெடில் - 2 (மாத்திரை)

வினா 02: குற்றியலுகரம் என்றால் என்ன?

விடை: தனிக்குற்றெழுத்தல்லாத ஏனைய எழுத்துக்களைத் தொடர்ந்து சொல்லின் இறுதியில் வல்லின மெய்களில் (க்,ச்,ட்,த்,ப்,ற்) ஏறி நிற்கும் 'உகரம்'

வினா 03: குற்றியலுகரச் சொற்களை எவ்வாறு இனங்காண்பீர்?

விடை: முதலாவது எழுத்து நெடிலாக இருத்தல்

உ+ம்:- கா, மா, சா

▣ இறுதி எழுத்து வல்லின மெய்களில் ஏறி நிற்கும் உகரமாக இருந்தால்

க், ச், ட், த், ப், ற் + உ = கு, சு, டு, து, பு, று ஆகிய எழுத்துக்களில் ஒன்று இறுதி எழுத்தாக இருந்தால் அது குற்றியலுகரச் சொல்லாகும்.

(எ-டு) பாடு, வீடு, காசு

வினா 04: இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துக்களால் அமைந்த சொல் குற்றியலுகரமா என்பதை எவ்வாறு இனங்காணலாம்?

விடை: இறுதி எழுத்து "கு,அ,டு,து,பு,று" ஆகிய எழுத்துக்களில் ஒன்றாக இருக்க வேண்டும்.

(எ-டு) பாக்கு, பஞ்சு, எட்டு

இவை குற்றியலுகரச் சொற்களாகும்.

வினா 05: குற்றியலுகர வகைகள் எவை?

விடை: ஆறு வகை

	(எ-டு)
1. வன் தொடர் குற்றியலுகரம்	காற்று
2. மென் தொடர் குற்றியலுகரம்	சங்கு
3. இடைத் தொடர் குற்றியலுகரம்	சால்பு
4. உயிர்த் தொடர் குற்றியலுகரம்	பயறு
5. நெடில் தொடர் குற்றியலுகரம்	மாடு
6. ஆய்தத் தொடர் குற்றியலுகரம்	அஃது

வினா 06: 'பாக்கு' என்ற சொல்லில் 'கு' இறுதி எழுத்து. ஆகவே, இது எவ்வகை குற்றியலுகரச் சொல்? ஏன்?

விடை: இறுதி எழுத்தான வல்லின மெய்களில் ஏறி நிற்கும் உகரமான 'கு' வின் அருகில் 'க்' என்ற வல்லின எழுத்து வந்ததால் வன் தொடர் குற்றியலுகரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு: இவ்வாறு இறுதி எழுத்தினருகில் வந்த எழுத்தைக் கொண்டு அச்சொல் எவ் வகை குற்றியலுகரம் என இனங்காணலாம்.

வினா 07: உயிர்த் தொடர், நெடில் தொடர் குற்றியலுகரத்தை விளக்குக. வித்தி யாசம் காணலாமா?

விடை: இவ்விரண்டுக்கும் சிறிய வித்தியாச முண்டு.

இரண்டு வகையின் இறுதி எழுத்தும், கு,சு,டு, து,பு,று ஆகிய எழுத்துக்களில் ஒன்றாக அமையும்.

நெடில் தொடர் இரண்டெழுத்து சொல்லா கும். முதல் எழுத்து நெடில் எழுத்தாக அமையும்.

(எ-டு) (ஆ)டு, (வீ)டு,

உயிர்த் தொடர் குற்றியலுகரமானது மூன்றெ ழுத்து சொல்லாக அமையும். இடையில் வரும் எழுத்து உயிர் எழுத்தாக அமையும்.

(எ-டு) வ(யி)று, வ(ரா)து, ப(யி)று

ய்+(அ) ர்+(ஆ) ய்+(அ)

உயிர் எழுத்து

வினா 08: முற்றியலுகரம் என்றால் என்ன?

விடை: குற்றியலுகரம் தவிர்ந்த ஏனைய எல்லா உகரச்சொற்களும் முற்றியலு கரச் சொற்களாகும்.

குற்றியலுகரத்தின் மாத்திரை 1/2

முற்றியலுகரத்தின் மாத்திரை 1 ஆகும்

(எ-டு) பாடு - குற்றியலுகரம்

படு- முற்றியலுகரம்

ஏழு, பசு, மேரு - முற்றியலுகரமாகும்

வினா 09: குற்றியலிகரம், மகரக் குறுக்கம் இரண்டையும் விளக்குக.

விடை: குற்றியலிகரம் - குற்றியலுகரத்தின் முன் யகர மெய் வருமாயின் 'உகரம்' 'இகர'மாக மாறும். ("லு-லி") பாட்டு + யாத்தனர் - பாட்டியாத்தனர்

மரக்குறுக்கம் - வகரத்தின் முன் வரும் 'ன,ண' - மகரமாக மாறும். மரு(ண் ம்)தரு(ம் வ)ளவன்

வினா 10: உயிரளபெடை, ஒற்றளபெடை என்பவற்றை விளக்குக.

மாத்திரையில் நீண்டொலித்தல் - நெடிலெழுத் துக்கள் நீண்டு ஒலிக்கையில் அயலில் அதன் இனக்குறில் இடப்படும்.

ஓ ஓதல், விடாஅது இது உயிரளபெடை

ஒற்றெழுத்துக்கள் அளபெடுத்தல். அடையாள மாக அதே எழுத்து அயலில் இடப்படும் திங்ங்கள், இலங்ங்கு

இது ஒற்றளபெடை

வினா 11: ஆய்தக் குறுக்கம், முற்றாய்தம் என்ப வற்றை விளக்குக.

இரண்டு சொற்கள் சேரும்போது, (நிலைமொழி A+B வருமொழி)

வருமொழி தகரமொழிச் சொல்லாக இருப்பின்

நிலைமொழியின் ஈற்று எழுத்து லகர,ளகரமா கயிருப்பின் அது ஆய்த எழுத்தாக (ஃ) மாறும். அதுவே ஆய்தக் குறுக்கம்.

(எ-டு) கல்+தீது கஃறீது

முள்+தீது முஃடீது

முற்றாய்தம் என்பது புள்ளி வடிவினதாகிய ஆய்தவெழுத்தாகும்.

அஃது, எஃகு, இஃது

வினா: ஆய்தத் தொடர் குற்றியலுகரம் எப்படி அமையும்?

விடை: இறுதி எழுத்து கு,சு,டு,து,பு,று ஆகிய எழுத்துக்களில் ஒன்றாக, அயலில் ஆய்த எழுத்தும் தொடர்ந்தது சொல் லாக இருத்தல்.

(எ-டு) அஃது, இஃது

வினா 12: பின்வரும் சொற்களுக்கு பெயரிடுக.

ஐந்து, ஔடதம், உழைப்பு, சௌக்கியம், வலை, படைப்பு

விடை: ▣ ஐகாரக் குறுக்கம் — ஐந்து, படைப்பு, உழைப்பு, வலை

▣ ஔகாரக் குறுக்கம் — ஔடதம், சௌக்கியம்

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷஹாதத் எனும் வீரமரணத்தை நேசித்த

அல்பர்ரா பின் மாலிக்

(ரழியல்லாஹு அன்ஹு)

அஷ்ஷெய்க். இஸ்மத் அலி (நளீமி)

(சென்ற இதழ் தொடர்...)

யமாமா யுத்தம் முடிந்து ஒரு மாத காலத்திற்குள் சுகம் பெற்று மீண்டும் போராட்ட களத்திற்குள் நுழைகிறார் பர்ரா. உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் காலத்தில் நடைபெற்ற ரோம, பாரசீகர்களுக்கெதிரான போராட்டங்களிலெல்லாம் அவர் கலந்து கொள்கிறார்.

அத்தகைய ஒரு போராட்டத்திலே, எதிரிப் படைகள் நெருப்பில் உருக்கிய சங்கிலிகளை முஸ்லிம்கள் மீது வீசி எறிகின்றனர். அப்போது பர்ராவின் சகோதரர் அனஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அச்சங்கிலிகளில் ஒன்றில் மாட்டிக் கொள்கிறார். கொதிக்கும் அச்சங்கிலியின் வேதனையிலிருந்து தப்பிக்கொள்ள அனஸ் (ரழியல்லாஹு அன்ஹு) முயற்சிக்கின்றார். என்றாலும் அவரால் முடியவில்லை. உடனே பர்ரா தனது சகோதரரிடம் ஓடோடிச் சென்று அவரை விடுவிக்கும் முயற்சியில் ஈடுபடுகிறார். அச்சமயம் எதிரிகள் கோட்டை மீதிருந்து அம்புகளால் அவரைத் தாக்க, எவ்வித அச்சமும் இன்றி அவர் தன் சகோதரரை மீட்டு வருகிறார். இம்முறையும் தான் வீர மரணத்தைத் தழுவவில்லையே என்ற கவலை அவரின் உள்ளத்தை ஆட்கொள்கிறது.

அவரது உடல் எத்தனை தடவைகள் காயப்பட்ட போதிலும், அவரது உள்ளமோ போராட்டக் களத்தை நோக்கிச் செல்லவே அவரைத் தூண்டிக் கொண்டிருந்தது. காரணம், தனது உயிர் போராட்டக் களத்தில் பிரிந்து தான் ஷஹீத் எனும் உயர் அந்தஸ்தை அடைய வேண்டும் என்பதே அவரது ஆசை.

அவரது ஆசை நிறைவேறும் தருணமும் வந்தது. பாரசீகர்களின் அஹ்வஸ் கோத்திரத்தினருக்கு எதிரான போராட்டம் வலுப்பெற்ற நேரமது. கலீபா உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அஹ்வஸ் கோத்திரத்தாரை அடக்க சுஹைல் பின் உதை (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் தலைமையில் ஒரு படையை அனுப்புகிறார். அப்படையில் பர்ரா பின் அனஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களும் இருந்தனர். போர் உக்கிரம் அடையும் கட்டம். முஸ்லிம்களின் தரப்பிலும் பெரும் சேதம். அப்போது முஸ்லிம் படையணியிலிருந்த சில ஸஹாபாக்கள் பர்ரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை நெருங்கி, "பர்ராவே, வரண்ட தலையுடன், தூசு படிந்த உடலுடன், இற்றுப் போன ஆடையோடு பிரார்த்தித்து அது மறுக்கப்பட்டவர்கள் குறைவானவர்களே. அவர்கள் சத்தியம் செய்தால் அதை நிறைவேற்றுபவர்கள். பர்ரா பின் அனஸ் அவர்களில் ஒருவராவார்" என்று நபிகளார் சொன்ன செய்தியொன்று உமக்கு நினைவிருக்கிறதா? எனக் கூறினார். இதைக் கேட்ட பர்ரா போர்க் களத்தின் மத்தியில் நின்று வானை நோக்கி இரு கரம் ஏந்துகிறார். "இறைவா! உன் அருளை எங்கள் மீது சொரிந்தருள்வாயாக! எமது எதிரிகளை தோல்வியடையச் செய்து எமக்கு வெற்றியைத் தந்தருள்வாயாக! மேலும், இன்றைய நாள் என்னை மரணிக்கச் செய்து உன் தூதரின் அருகில் இருக்கச் செய்வாயாக" என்று பிரார்த்தித்தவராக தனது சகோதரரின் தோளில் சாய்கிறார். ஆம், அப்போராட்டகளத்தில் ஏற்கனவே காயப்பட்டிருந்த அவர், தனது நீண்ட நாள் ஆசையான ஷஹாதத் எனும் வீரமரணத்தை அடைந்துவிட்ட திருப்தியோடு இவ்வுலகை விட்டுப் பிரிகிறார்.

அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்று மேலான சுவனத்தை அடையும் இலக்கோடு இந்த உலகத்தில் வாழ்பவர்கள் இறைதிருப்தியைப் பெறுவதற்காக தமது அறிவையும் செல்வத்தையும் நேரத்தையும் ஏன் உயிரையும் கூட தியாகம் செய்திடத் தயாராக இருக்க வேண்டும். அல்பர்ரா பின் அனஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் சுவனத்துக் கனவு எமது உள்ளங்களிலும் என்றும் பசுமையாக வாழ வேண்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிதம்

10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

ஆசிரியர்: எஸ்.எம்.ஏ. ஸலாம், மாவனல்லை

இருபடிச் சமன்பாடுகள்

இருபடிக் கோவைகளின் காரணிகள் பற்றிய அறிவு இன்மையால் பல மாணவர்கள் இருபடிச் சமன்பாடுகளின் தீர்வு காண சிரமப்படுகின்றனர்.

உ+ம் 1: - x^2-x எனும் கோவை x இன் இரண்டாம் படியிலுள்ளது. (x^2)

இதன் காரணி $x^2-x=x\,(x-1)$ ஆகும்.

எனினும் இது ஒரு இலகு காரணி ஆகும்.

உ+ம் 2:- x^2-x-2 எனும் கோவையை அவதானியுங்கள்.

இக்கோவையானது $x^2(-2x+x)-2$ என எழுதக்கூடியதாகும்.

அடைப்புக்குள் காட்டப்பட்ட $-2x+x=-x$ ஆகும்.

$\therefore x^2-x-2 = x^2-2x+x-2$

$= x(x-2)+1\,(x-2)$

$= (x-2)\,(x+1)$ என காரணிகளின் பெருக்கமாக எழுதப்படும்.

உ+ம் 3:- x^2-x-6 என்பதில்

$= x^2-3x+2x-6$
$= x(x-3)+2\,(x-3)$
$= (x-3)\,(x+2)$

$-6\times x^2 = -6x^2$
$(-3x)\times(+2x)$
$-3x+2x = -x$

உ+ம் 4:- $=2x^2-x-3$
$= 2x^2-3x+2x-3$
$= x(2x-3)+1\,(2x-3)$
$= (2+1)\,(2x-3)$

$-3\times 2x^2 = -6x^2$
$(-3x)\times(+2x)$
$-3x\times 2x = -x$

உ+ம் 5:- $2x^2+7x-4$ $= 2x^2+8x-x-4$
$=2x\,(x+4)-1\,(x+4)$
$= (x+4)\,(2x-1)$

$= 2x^2\mathrm{X}{-4} = -8x^2$
$(+8x)\times(-x)$
$+8x-x = +7x$

உ+ம் 6:- $4x^2 + x - 3 = 4x^2+4x-3x-3$
$= 4x(x+1)-3(x+1)$
$= (x+1)\,(4x-3)$

$4x^2\times{-3} = -12x^2$
$(+4x)\times(-3x)$
$4x-3x = +x$

உ+ம் 7:- $3a^2+13a+4$ $= 3a^2+12a+a+4$
$= 3a(a+4)+(a+4)$
$= (a+4)\,(3a+1)$

$3a^2\times 4= 12a^2$
$(12a)\quad(+a)$
$+12a+a = 13a$

இவ்வாறே இவ்வழிமுறைகளில் பயிற்சி பெற்றால் அன்றி ஓரே பார்வையில் நாம் இது போன்ற காரணிகளை பெறுவது என்பது கடினமேயாகும்.

உ+ம் 7 இல்:- $x^2-x = 0$ என தரப்பட்டால் நாம் காரணி மூலம் இவ்விருபடிச் சமன்பாட்டை தீர்க்கலாம்.

$x^2-x =0$

$x(x-1)=0$ இங்கு ஏதாவது ஒரு கணியம் பூச்சியத்தால் பெருக்கப்பட்டாலன்றி விடை பூச்சியமாகாது. ஆகவே மேலே x இனதும் $(x-1)$ இனதும் பெருக்கம் பூச்சியமெனின் $x=0$ அல்லது $x-1=0$ ஆக அமைய வேண்டும்.

$\therefore$ $x-1=0$ எனின்

$x=1$ ஆகும்.

விடைகள் $x=0$

அல்லது $x=1$ என கூறப்படும்.

இதே போல்

உ+ம் 2இல் $x^2-x-2=0$

$(x-2)\,(x-1) = 0$

$x-2 = 0$ அல்லது $x-1 =0$

$x = 2$ அல்லது $x=1$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ+ம் 3 இல் $x^2-x-6=0$

$(x-3)(x+2) = 0$

$x-3 = 0$ அல்லது $x+2 = 0$

$x = 3$ அல்லது $x=-2$

உ+ம் 4 இல் $2x^2-x-3=0$

$(2x-3)(x+1) = 0$

$2x-3 = 0$ அல்லது $x+1 = 0$

$2x = 3$ அல்லது $x = -1$

∴ $x = 3/2$

உ+ம் 5 இல் $2x^2+7x-4=0$

$(x+4)(2x-1) = 0$

$x+4 = 0$ அல்லது $2x-1 = 0$

$x = -4$ அல்லது $2x = 1$

∴ $x = 1/2$

உ+ம் 6 இல் $4x^2+x-3 = 0$

$(x+1)(4x-3) = 0$

$x+1 = 0$ அல்லது $4x-3 = 0$

$x = -1$ அல்லது $4x = 3$

∴ $x=3/4$

ஜோக்...

ஆசிரியர்: பிள்ளைகள் வட்டங்களின் சுற்றளவு அல்லது பரிதியின் நீளம் என்பது பற்றி நாம் கற்றிருக்கிறோம். அதற்கான வாய்ப்பாடு $2\pi r$ ஆகும். r என்பது ஆரை ஆகும். $\pi = 22/7$ ஆகும். சரி இப்பொழுது நான் சொல்வதை எழுதுங்கள்.

நகர்ந்து செல்லும் இயந்திரம் ஒன்றின் பின் சில்லு ஒரு தடவை முழுமையாக சுற்றினால் முன் சில்லு மூன்று தடவைகள் சுற்றும். முன் சில்லின் ஆரை 14cm ஆகும். இவ் இயந்திரம் 264m செல்ல வேண்டுமாயின் பின்சில்லு எத்தனை தடவைகள் சுற்றும்? ஐந்து நிமிடங்கள் தருகிறேன் விடையைக் கண்டுபிடியுங்கள்.

ஐந்து நிமிடங்களின் பின்

ஆசிரியர்: நிஸ்பர், பின் சில்லு எத்தனை தடவை சுற்றும் என்று சொல்லு பார்க்கலாம்?

நிஸ்பர்: தெரியாது சேர், தலை சுற்றுது சேர்.

விடை: ஒரு தடவை முன் சில்லு சுற்ற அதன் சுற்றளவு தூரம் செல்லும்.

அது செல்லும் தூரம் $2\pi r \times x$ cm ஆகும்.

100cm = 1m ஆகவே

முன் சில்லு 300 தடவைகள் சுற்றும், பின் சில்லு 100 தடவைகள் சுற்றும்.

$2..xx_2 = 264x100$

$2x22\ x14 = 264x100$

7

$88x = 264x100$

88

$x = 3x100 = 300$

வகுப்பறையில்...

ஆசிரியர்: அன்புச் செல்வங்களே! இன்று நாம் ஒரு கருவியைப் பற்றி பார்ப்போம். உலகிலேயே பயங்கரமான ஆயுதமாகக் கருதப்படுகிறது. அது என்ன?

சமீர்: மெஷின் கன் சார்!

ஆசிரியர்: இல்லை! இதன் மூலம் யாரையும் எளிதாக காயப்படுத்தலாம்.

ஆஷிக்: கத்தி சார்...!

ஆசிரியர்: ஹா! ஹா! இல்லை! இல்லை! ஒரே சமயத்தில் பல பேரைத் தாக்கவல்லது! ஆக்கத்திற்காகவும் அழிவுக்காகவும் பயன்படுத்தலாம்.

தாரிக்: Atom Bomb! Nuclear Bomb!

ஆசிரியர்: No! No! ஆயிரக்கணக்கான சிறு உறிஞ்சிகளால் ஆனது. 5 வித்தியாசமான வேதிப் பொருள்களைக் (Chemical) கொண்டுள்ளது.

சதாம்: Yes sir! Chemical Bomb! Biological Bomb!

ஆசிரியர்: ஓய்வில்லாமல் செயல்படவல்லது, 60-70 கிராம் எடையுள்ளது. அனைவரிடமும் உள்ளது. ஆனால் தனித்தன்மை வாய்ந்தது.

வசிம்: கைவிரல்?

ஆசிரியர்: இல்லை ராஜா! Wrong Answer!

மாணவர்கள்: சார்! நீங்களே சொல்லுங்க...

ஆசிரியர்: இவ்வளவு நேரம் பேசியது 'நாக்கு' பற்றித்தான். நாக்கு மிகப் பயங்கரமான ஆயுதமாகும். ஆகவேதான் முஹம்மது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் "நாவைக் காப்பவனுக்கு சுவனம் உண்டு" என கூறினார்கள்.

நன்றி: இளம்பிறை, ரிஃபாயுதீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரோக்கியமான கற்றலுக்கு துணை செய்யும் விளையாட்டு



ஹனீபா ஏ. வஹாப் (இஸ்லாஹி)

மாணவர்கள் தங்களுடைய அறிவை விருத்தி செய்ய வகுப்பறை மற்றும் வகுப்பறைக்கு வெளியிலான பல கற்றல் செயன்முறைகளில் ஈடுபடுகின்றனர். இந்த கற்றல் செயன்முறைகளை உத்வேகமாக, சுறுசுறுப்பாக மேற்கொள்வதற்கு விளையாட்டு நிகழ்ச்சிகள் துணை புரிவதோடு மாணவர்களுக்குத் தேவையான ஆளுமைத் திறன்களை மேம்படுத்துவதிலும் இவ்விளையாட்டு நிகழ்ச்சிகள் மிக முக்கிய பங்காற்றுகின்றன.

படிக்கும்போது தூக்கம் வருகிறது, உடல் சோர்வாக இருக்கிறது, நீண்ட நேரம் ஒரே இடத்தில் இருந்து படிக்க முடியாது என பல்வேறு முறைப்பாடுகளை இன்றைய மாணவர்கள் முன்வைக்கின்றனர். இத்தகைய முறைப்பாடுகளுக்குத் தீர்வாக ஒரு மாணவனுக்குத் தேவையான காத்திரமான உடலாரோக்கியத்தை வழங்குவதில் விளையாட்டு நிகழ்ச்சிக்குரிய பங்கு மிகப் பெரியதாகும்.

ஒரு மாணவன் தனது பள்ளிப் பருவத்தில் வளர்த்தெடுக்க வேண்டிய எத்தனையோ ஆளுமைப் பண்புகளை உருவாக்கி விருத்தி செய்வதிலும் விளையாட்டு நிகழ்ச்சிகள் துணை புரிகின்றன. இந்த அடிப்படையில் விளையாட்டு நிகழ்ச்சிகள் ஒரு மாணவனுடைய ஒட்டு மொத்த வாழ்வில் இரு வகையான பலன்களை நல்குகின்றன.

01. கல்வி ரீதியிலான பயன்கள்

02. ஆளுமை ரீதியிலான பயன்கள்

01. கல்வி ரீதியிலான பயன்கள்

விளையாட்டு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்பவர்கள் அத்தகைய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாத மாணவர்களைவிட கற்றலில் பொறுப்புணர்வு அதிகம் உள்ளவர்களாக இருந்து அதிக புள்ளிகளைப் பெறக்கூடியவர்களாக மிளிர்கின்றனர் என ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன.

விளையாட்டு நிகழ்ச்சிகளில் ஈடுபடுகின்ற மாணவர்கள் தேகாரோக்கியமாக இருப்பதன் காரணமாக ஒரு விடயத்தில் சிறப்பாக கவனக் குவிப்பை மேற்கொள்ளக்கூடியவர்களாகவும் வகுப்பறைக் கற்பித்தலின்போது அங்கு சொல்லப்படுகின்ற விடயங்களைச் சிறந்த முறையில் செவிமடுக்கக்கூடியவர்களாகவும் காணப்படுகின்றமை அவதானிக்கப்படுகின்றது. உடற்பயிற்சியானது நிர்ப்பீடணத் தொகுதியை மேம்படுத்துவதோடு கலங்களை பலமடையச் செய்து உடற் தொகுதிகள் சிறந்த முறையில் இயங்குவதற்கு பெரும் பங்காற்றுகின்றது. விளைவாக, போஷாக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்மை மற்றும் நோய்களால் பாதிக்கப்படுவதிலிருந்து மாணவர்கள் பாதுகாக்கப்படுகின்றனர். போஷாக்கு குறைபாடு மற்றும் ஏனைய நோய்கள் காரணமாக சுகவீன விடுமுறை பெற வேண்டிய தேவை ஏற்படுகிறது. மேலும் கல்வி ரீதியிலான அடைவுகளில் கவனம் செலுத்த முடியாமலும் போகின்றது.

கற்றல் குறைபாடுகள் உள்ள மாணவர்களுக்கும் தொடராகப் படிக்க முடியாமல் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தக்கூடிய நிலையில் உள்ள மாணவர்களுக்கும் விளையாட்டு நிகழ்ச்சிகளிலுள்ள மற்றுமொரு நலன்தான், படிப்பதில் ஆர்வமும் தைரியமும் உற்சாகமும் ஏற்படுவதாகும். இத்தகைய மாணவர்களை வலுவூட்டுவதோடு அவர்களுக்கு சுயநம்பிக்கையையும் மனவுறுதியையும் விளையாட்டுக்கள் வழங்குகின்றன.

ஆளுமை ரீதியிலான பயன்கள்

மாணவர்களுக்குத் தேவையான பல்வேறு ஆளுமைத் திறன்களை வளர்ப்பதினூடாக அவர்களை பொறுப்புணர்ச்சிமிக்க வாலிபர்களாகவும் ஆக்கபூர்வமான குடிமகனாகவும் உருவாக்குவதில் விளையாட்டு நிகழ்ச்சிகள் பெரும் பங்காற்றுகின்றன. விளையாட்டினூடாக மாணவர்கள் அடைந்து கொள்ள முடியுமான ஆளுமைத் திறன்கள் ஏராளமெனினும் சிலவற்றை இங்கு நோக்குவோம்.

1. தலைமைத்துவம் (Leadership)

விளையாட்டு நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளும் மாணவர்கள் தலைமைக்குக் கட்டுப்படுவதற்கும் தலைமைத்துவத்தை ஏற்பதற்குமான பயிற்சிகளைப் பெற்றுக் கொள்கின்றனர். இதற்கு உதாரணமாக கிரிக்கெட், உதைப்பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களைக் குறிப்பிடலாம். தலைவரின் கட்டளைகளை ஏனைய அங்கத்தினர் கடைப்பிடிக்க வேண்டும். அப்போதுதான் குறிப்பிட்ட அணியின் வெற்றி நோக்கிய செயற்பாடுகளை சீராக முன்னெடுக்க முடியும்.

2. குழுவாகச் சேர்ந்து வேலை செய்தல் (Team Work)

உதாரணமாக உதைப்பந்தாட்டப் போட்டியில் எதிர் அணியை எதிர்த்து விளையாடி ஜெயிக்க அந்த அணியிலுள்ள அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியம். எனவே, இங்கு குழுவாக இணைந்து செயற்படும் பண்பும் திறனும் வளர்கிறது.

3. பரஸ்பர ஒத்துழைப்பு (Help Each other)

4. வெற்றி தோல்வி (Winning and Losing)

வெற்றியும் தோல்வியும் விளையாட்டின் ஒரு பகுதி என்பதை விளையாட்டு வீரன் கற்றுக் கொள்கிறான். வெற்றி என்பது பெற்றுக் கொள்வதற்காக; தோல்வி என்பது கற்றுக் கொள்வதற்காக என்பது விளையாட்டு அவனுக்குச் சொல்லிக் கொடுக்கும் பாடமாகும். இதனூடாக வாழ்க்கையில் ஏற்படும் தோல்விகளின்போது தன்னை உறுதியாக வைத்துக் கொள்வதற்கும் வெற்றிகளின்போது நிதானமாக நடந்து கொள்வதற்கும் விளையாட்டு காரணமாக அமைகிறது.

5. க஠ின உழைப்புக்கான பரிசு (Rewards of hard work)

விளையாடும்போது ஒவ்வொருவரும் தமது வெற்றிக்காகவும் தமது அணியின் வெற்றிக்காகவும் முடியுமான அளவு கடினமாக உழைக்கின்றனர். இறுதியில் அதற்கான வெற்றியைப் பெறுகின்றனர். எனவே, ஓர் இலக்கு நோக்கி கடினமாக உழைக்கின்றபோது வெற்றி பெறுவதற்கான சாத்தியங்கள், சந்தர்ப்பங்கள் அதிகம் என்பதை மாணவர்களுக்கு விளையாட்டு உணர்த்துகின்றது.

6. சுய ஒழுங்கு (Self Discipline)

விளையாட்டு நிகழ்ச்சியில் பல சட்டதிட்டங்கள், ஒழுக்கக் கோவைகள் காணப்படுகின்றன. இவற்றைக் கடைப்பிடித்து விளையாடுகின்ற போது மாணவர்களிடம் சுய ஒழுக்கம், கட்டுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

பாடு, சட்டங்களை மதித்து அதற்குக் கட்டுப்படுகின்ற மனப்பாங்கு என்பன உருவாகின்றன.

7. சுய நம்பிக்கை (Self confidence)

விளையாட்டுக்களில் ஈடுபடுகின்ற மாண வர்களிடம் தன்னால் இயலும் என்ற மனப் பான்மை வளர்கின்றது.

8. தொடர்பாடல் திறன் (Communication Skill)

குழுவாகச் சேர்ந்து விளையடும்போது தங்களுடைய குழு உறுப்பினர்களுக்கு மத்தியி லும் அடுத்த குழுவினரோடும் தொடர்பாடல் மேற்கொள்ள வேண்டிய பல்வேறு சந்தர்ப் பங்கள் ஏற்படுகின்றன. இதனால் பிறருடன் தகவல் தொடர்பினை சுமுகமான முறையிலும் வெற்றியளிக்கக்கூடிய வகையிலும் மேற் கொள்ள மாணவர்கள் பயிற்சி பெறுகின்றனர்.

9. தீர்மானம் எடுத்தல் (Decision Making)

விளையாட்டு வீரன் சந்தர்ப்பங்களுக்கேற்ப பல்வேறு முடிவுகளை உடனுக்குடன் எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றான். இவ்வாறு தீர்மானம் மேற்கொள்வதற்கு சிந்த னைத் திறன் அதிகம் தேவைப்படுகிறது. விளையா டுவதினுடாக இதனை ஒரு மாணவன் பெற்றுக் கொள்கிறான்.

10. பிரச்சினைகளைத் தீர்த்தல் (Problem solving)

விளையாடுகின்றபோது சின்ன சின்னதாக ஏற்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்க்க முற்படு வதால் சொந்த வாழ்க்கையில் பிரச்சினைகள் ஏற்படும்போது அவற்றைச் சுமுகமாக தீர்க்கக் கற்றுக் கொள்கிறான்.

11. சிக்கல் மற்றும் போட்டித்தன்மை நிறைந்த ஒரு சூழ்நிலையைக் கையாளும் திறன் (skills to handle competitive situations)

12. கிரிக்கெட், உதைப்பந்தாட்டம், கரப்பந் தாட்டம் பெட்மின்டன், டெனிஸ் போன்ற எந்த விளையாட்டிலும் போட்டியின் இறுதிக் கட் டத்தை அண்மிக்கும்போது வெற்றியைத் தமதாக்கிக் கொள்வதற்காக எத்தனையோ வழிமுறைகளையும் யுக்திகளையும் கையாளு கின்றனர். இது பொது வாழ்க்கையிலும் சிக்கல் கள், பிரச்சினைகள் மற்றும் போட்டித் தன்மை யான சூழ்நிலைகள் ஏற்படும்போது அவற்றைக் கையாளும் திறனை ஒருவருக்குள் ஏற்படுத்துகிறது.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்: பலவீனமான முஃமினைவிட பலமான முஃமின் அல்லாஹ்விடத்தில் மிக விருப்பத்துக்குரியவன்.

(முஸ்லிம்)

இவ்வாறு கல்வி ரீதியிலும் ஆளுமை ரீதியிலும் எண்ணற்ற பயன்களைத் தரவல்ல விளையாட்டு நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளை பாடசாலை ஒழுங்கு செய்து தருகின்றது. தவிர சுயமாக உடற் பயிற்சிகளை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பங்க ளும் மாணவர்களுக்குக் கிடைக்கின்றன. இவற் றைப் பயன்படுத்துவதனூடாக பாடசாலைப் பருவத்திலும் பின்னரும் உடல், உளரீதியாக ஆரோக்கியமிக்கவர்களாகத் திகழ்வதற்கு முயற் சிக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட நேரத்தை விளையாடுவதற்காக ஒதுக்குவதன் மூலம் கற்றலுக்கான ஆர்வத்தையும் ஆரோக் கியத்தையும் பெற்றுக்கொள்ள முனைய வேண்டும்.

ஆரோக்கியமான கற்றல், சிந்தனை மற்றும் ஆரோக்கியமான உடலுக்கு எந்தவகையிலும் ஒத்துவராத, ஒத்துழைக்காத விளையாட்டுக் களிலிருந்து முடியுமானவரை தூரமாக இருக்க வேண்டும்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரழியல் லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "பலவீனமான முஃமினைவிட பலமான முஃமின் அல்லாஹ்விடத்தில் மிக விருப்பத்துக்குரியவன்." (முஸ்லிம்)

எனவே, பொருத்தமான விளையாட்டுக்களை யும் உடற்பயிற்சிகளையும் செய்வதன் மூலம் அறிவு, உடலாரோக்கியம் அனைத்திலும் பலமான முஃமின்களாக மாறுவதற்கு பள்ளிப்பருவத்திலி ருந்தே முயற்சிப்போம், இன்ஷா அல்லாஹ். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானம்

ஆசிரியர்: எம்.எம்.எஸ். பிரேம் நவாப்

மூலகங்களின் இயல்புகளின் ஆவர்த்தனக் கோலங்கள்– தரம் 10

- மூலகங்களின் இயல்புகள் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடுகின்றன.
- மூலகங்களின் பௌதிக இயல்புகளான உருகுநிலை, கொதிநிலை, அணுக் கனவளவு, அடர்த்தி தன்வெப்பக் கொள்ளளவு என்பனவும் அவற்றின் இரசாயன இயல்புகளும் அணுவெண்ணிற்கேற்ப வேறுபடுகின்றன.

01. கீழே தரப்பட்டுள்ளவை மூலகங்களின் சில பௌதிக இயல்புகளுக்கான வரைவிலக்கணங்களாகும். அவற்றைக் குறிக்கும் பௌதிக இயல்பினை புள்ளிக் கோட்டில் எழுதுக.

i. திண்மப் பதார்த்தம் திரவ நிலைக்கு மாறும்போது உள்ள மாறா வெப்பநிலை ....

ii. திரவத்தின் ஆவியமுக்கம் வளிமண்டல அமுக்கத்திற்குச் சமனாகும் வெப்பநிலை ....

iii. அணுவொன்றின் கருவுக்கும் இறுதிச் சக்தி மட்டத்திற்கும் இடையேயுள்ள தூரம் ....

iv. 1 Kg திணிவுடைய பதார்த்தத்தின் வெப்பநிலையை 1K இனால் உயர்த்தத் தேவையான வெப்பக் கணியம்: ....

- மூலகங்களை அணுவெண் ஏறுவரிசைப்படி ஒழுங்குபடுத்த, குறித்த ஆயிடைகளில் ஒத்த இயல்புகள் மீண்டும் மீண்டும் தோன்றுதல் ஆவர்த்தன விதி எனப்படும்.

ஆவர்த்தன அட்டவணை

- மூலக இயல்புகளின் ஆவர்த்தனக் கோலங்களின் அடிப்படையில் மூலகங்களை முதலில் அட்டவணைப்படுத்தியவர் திமித்ரிவ் மெண்டலிவ் ஆவார். இவரின் அட்டவணை ஆவர்த்தன அட்டவணை என அழைக்கப்படும். இவர் மூலகங்களை அணுத்திணிவு ஏறுவரிசைப்படி ஒழுங்கு படுத்தினார்.
- நவீன ஆவர்த்தன அட்டவணையில் அணுவெண் ஏறுவரிசைப்படி மூலகங்கள் ஒழுங்குபடுத்தப் பட்டுள்ளது. இதில் 7 ஆவர்த்தனங்களும் 8 கூட்டங்களும் உள்ளன.

முதல் 20 அணுவெண்களையுடைய மூலகங்களைக் கொண்ட ஆவர்த்தன அட்டவணையின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி தரப்படும் வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

H							He
Li	Be	B	C	N	O	F	Ne
Na	Mg	Al	Si	P	S	Cl	Ar
K	Ca						

i. I ம் கூட்ட மூலகங்கள் அழைக்கப்படும் பெயர் எது? ....

ii. அலசன்கள் என அழைக்கப்படும் கூட்டம் எது? ....

iii. விழுமிய வாயுக்களாகக் கருதப்படும் மூலகங்களை எழுதுக........

iv. VIம் கூட்ட மூலகங்களின் வலுவளவு யாது? ....

- ஆவர்த்தன அட்டவணையில் ஒரு மூலகத்தின் அமைவிற்கும் அதன் இலத்திரன் நிலையமைப் பிற்கும் இடையே தொடர்பு உண்டு. அதாவது, இலத்திரன் நிலையமைப்பில் இறுதியோட்டு இலத்திரன் எண்ணிக்கை ⇨ கூட்ட எண், சக்தி மட்ட எண்ணிக்கை ஆவர்த்தன எண் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. R எனும் மூலகத்தின் இலத்திரன் நிலையமைப்பு R⇨ 2,8,4 ஆகும். இதன் ஆவர்த்தன எண்ணையும் கூட்ட எண்ணையும் எழுதுக.

ஆவர்த்தன எண்: .... கூட்ட எண்: ....

04. பின்வரும் இயல்புகள் ஆவர்த்தன அட்டவணையில் எவ்வாறு மாற்றமடைந்து செல்கின்றன என்பதை எழுதுக.

i. கொதிநிலை, உருகுநிலை:
கூட்டத்தின் வழியே கீழ் நோக்கி: ....
ஆவர்த்தனம் வழியே வலம் நோக்கி: ....

ii. அணுவாரை, அணுக் கனவளவு;
கூட்டத்தின் வழியே கீழ் நோக்கி: ....
ஆவர்த்தனம் வழியே வலம் நோக்கி: ....

iii. உலோக இயல்பு;
கூட்டத்தின் வழியே கீழ் நோக்கி: .... ஆவர்த்தனம் வழியே வலம் நோக்கி: ....

இரசாயனவியல்:

வாயுக்களின் நடத்தைக் கோலங்கள், வெவ்வேறு கரைசல்கள், அவற்றின் உபயோகங்கள்- தரம் 11

- வாயுக்களின் கட்டமைப்பில் துணிக்கைகள் மிக ஐதாகக் காணப்படுகின்றன. இவை தனித்தனியான சுயாதீன இயக்கத்தைக் கொண்டிருக்கும். இதனால் வாயுக்களுக்கு;

  i. குறித்த வடிவம் இல்லை ii. குறித்த கனவளவு இல்லை iii. நெருக்கப்படும் தன்மை மிக அதிகம்

- வாயுக்களின் நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் 4 ஆகும்.

  i. வெப்பநிலை (T) ii. அமுக்கம் (P) iii. கனவளவு (V) iv. பதார்த்த அளவு (M)

- மேற்படி காரணிகளில் இரு காரணிகள் மாறாதிருக்க ஏனைய இரண்டில் ஒன்றை மாற்றும்போது அது சார்பாக மற்றைய காரணியும் மாறும்.

வாயுக்கள் தொடர்பான விதிகள்

பொயிலின் விதி	மாறா வெப்பநிலையில் குறித்தளவு வாயுவின் அமுக்கம் அதன் கனவளவிற்கு நேர்மாறு விகித சமனாகும். $PV = K \Rightarrow P_1V_1 = P_2V_2$ [T], [M]
சாள்சின் விதி	மாறா அமுக்கத்தில் குறித்தளவு வாயுவின் கனவளவு அதன் தனி வெப்பநிலைக்கு நேர் விகித சமனாகும். $\frac{V}{T} = K \Rightarrow \frac{V_1}{T_1} = \frac{V_2}{T_2}$ [P], [M]

01. மாறா அமுக்கத்தில் குறித்த திணிவு வாயுவின் கனவளவிற்கும் வெப்பநிலைக்கும் இடையிலான தொடர்பைக் கண்டறிய மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை அமைப்பும் அதில் பெறப்பட்ட அளவீடுகளும் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெப்பநிலை (^0C)	0	10	30	50	80
வாயு நிரலின் நீளம் (cm)	2	2.4	3.3	4.0	5.3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i. இங்கு மேற்படி இரு அளவீடுகளையும் பெறுவதற்குத் தேவையான உபகரணங்கள் எவையெனக் குறிப்பிடுக.

ii. அட்டவணையில் உள்ள பெறுமானங்களைக் குறித்து வரைபு வரைக.

iii. இங்கு வாயுவின் கனவளவு வெப்பநிலையுடன் எவ்வாறான மாற்றத்தைக் காட்டுகின்றது?

iv. இப்பரிசோதனையில் எடுக்கப்பட வேண்டிய எடுகோள் ஒன்றைக் குறிப்பிடுக.

v. இப்பரிசோதனையுடன் தொடர்புபட்ட விதி யாது? அவ்விதியை எழுதுக.

வெவ்வேறு கரைசல்களும் அவற்றின் உபயோகங்களும்

✳ கலவைகளை அவற்றில் அடங்கும் பதார்த்தங்களின் இயல்பிற்கேற்ப ஏகவினக் கலவை, பல்லினக் கலவை எனப் பிரிக்கலாம்.

1. ஏகவினக் கலவை, பல்லினக் கலவை என்பவற்றில் பின்வரும் கலவைகள் எதில் அடங்கும் என்பதை எழுதுக.

i. ஈய நைத்திரேற்றுக் கரைசல்....................... ii. ஈயகுளோரைட்டுக் கரைசல் ....

iii. அரிசி, மண் கலவை .... iv. கலப்புலோகங்கள் ....

✳ கரைப்பான்களை அவற்றின் முனைவுத் தன்மையின் அடிப்படையில் முனைவுக் கரைப்பான், முனைவற்ற கரைப்பான் என இரு வகைப்படுத்தலாம்.

முனைவுக் கரைப்பான்களை அவற்றிலுள்ள O-H, N-H, H-F, C=O போன்ற பிணைப்புகள் இருப்பதன் மூலம் எளிதாகக் கண்டறியலாம்.

✳ கரைப்பான்களில் அடங்கியுள்ள கூறுகளின் அடிப்படையில் சேதனக் கரைப்பான், அசேதனக் கரைப்பான் என கரைப்பான்களை இரு வகைப்படுத்தலாம்.

சேதனக் கரைப்பான்களில் கட்டாயமாக காபனும் பெரும்பாலும் ஐதரசனும் அத்துடன் ஒட்சிசன், அலசன்கள் போன்ற மூலகங்களும் அடங்கியிருக்கும்.

2. பின்வரும் இயல்புகளைக் கொண்ட கரைப்பான்கள் இரண்டு வீதம் எழுதுக.

i. அசேதன முனைவுக் கரைப்பான்

ii. சேதன முனைவற்ற கரைப்பான்

3. 120 கிராம் யூரியாவை [$CO(NH_2)_2$] ஐக் கரைத்து 1000 மில்லி லீட்டர் யூரியாக் கரைசல் தயாரிக்கப்படின் கரைசலின் செறிவை mol dm^{-3}இல் காண்க.

கரைதிறன்

குறித்த வெப்பநிலையில் மேலதிக கரையத்தின் முன்னிலையில் 100கிராம் கரைப்பானில் கரையும் கரையத்தின் உச்ச அளவு அக்கரையத்தின் கரைதிறன் ஆகும்.

4. திண்ம, திரவ கரையங்களின் கரைதிறன் தங்கியுள்ள காரணிகள் எவை?

5. வாயுக்களின் கரைதிறன் தங்கியுள்ள காரணிகள் எவை?

6. பின்வரும் சந்தர்ப்பங்களில் பயன்படும் கரைதிறனின் பிரயோகங்களை எழுதுக.

i. உப்புக் கைத்தொழில், சீனிக் கைத்தொழில் என்பவற்றில் :..

ii. மாசுக்கள் கொண்ட மாதிரியிலிருந்து சுத்தமான, பளிங்குருவான திரவியங்களைப் பெற்றுக் கொள்ள :...

iii. தாவரங்களிலுள்ள மருத்துவக் குணமிக்க சேர்வைகளைப் பிரித்தெடுக்க :...............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிராஜுல் ஹஸன்

நிதானம் எனும் அழகிய பண்பு!

ஒருமுறை பஹ்ரைனில் இருந்து இருபது, முப்பது ஒட்டகங்களில் பயணம் செய்து, பெரிய குழு ஒன்று மதீனாவுக்கு வந்தது. அண்ணல் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களைச் சந்தித்துப் பேச பேண்டும் என்பதே அந்தக் குழுவின் நோக்கம்.

மதீனாவின் எல்லையை அடைந்ததுமே ஒட்டகங்களை வேகமாகச் செல்லும்படி முடுக்கிவிட்டார்கள். புழுதியைக் கிளப்பிக் கொண்டு அவை விரைந்தோடின.

அண்ணல் நபிகளார் தங்கியிருக்கும் இடம் வந்ததும் திபுதிபுவென்று ஒட்டகங்களில் இருந்து குதித்து நபியைக் காண நெருங்கியடித்துக் கொண்டு ஓடினர். அவர்கள் நீண்ட தூரம் பயணம் செய்து வந்திருந்ததால் ஆடைகள் புழுதி படிந்து கசங்கி இருந்தன. தலைமுடி பரட்டையாகக் காட்சியளித்தது. அவற்றைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் அண்ணலாரின் திருமுகத்தைக் கண்டு மகிழ்ந்தனர்.

அதேசமயம்-

அந்தக் குழுவின் தலைவராக வந்து முன்ஜித்பின் ஆயித் என்பவர் கொஞ்சமும் அவசரப்படவில்லை. ஆரவாரம் செய்யவில்லை.

அமைதியாக ஒட்டகங்களைக் கட்டிப் போட்டார். களைப்புடன் இருந்த அந்த வாயில்லாப் பிராணிகளுக்கு நீர் புகட்டினார். அவற்றுக்குத் தேவையான தீவனங்களை இட்டார்.

பிறகு தாம் கொண்டு வந்த பொருள்களை எல்லாம் ஓரிடத்தில் ஒழுங்காக அடுக்கி வைத்தார். குளித்து முடித்தார். இருப்பதில் நல்ல ஆடை ஒன்றை எடுத்து அணிந்து கொண்டார்; நறுமணம் பூசினார்; தலையை ஒழுங்காக வாரிக் கொண்டார்.

பிறகு நிதானமாகவும் கண்ணியமாகவும் அண்ணல் நபிகளாரைச் சந்திக்க வந்தார். அண்ணல் நபிகளாருக்கு முன்ஜித்தின் நிதானமும் மிடுக்கும் மிகவும் பிடித்துவிட்டது. அவரிடம் அண்ணலார் கூறினார்கள்.

“உங்களிடம் இரண்டு பண்பு நலன்கள் இருக்கின்றன. அவற்றை இறைவனும் விரும்புகிறான். முதலாவது பொறுமை; இரண்டாவது நிதானம்.”

எந்த வேலையையும் அவசரப்படாமலும் ஆர்ப்பாட்டம் செய்யாமலும் செய்து முடிப்பது அண்ணலாருக்குப் பிடித்தமானதாகும். தொழுகைக்கான அழைப்பு விடுக்கப்பட்டு ஜமாஅத்துடன் தொழுகையை நிறைவேற்றப்போகும் போது கூட நிதானத்தைக் கடைபிடிக்கும்படி அண்ணலார் அறிவுறுத்தியுள்ளார்கள்.

இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள். “அரஃபா நாளின் போது நாங்கள் அண்ணல் நபிகளாருடன் ஒட்டகங்களில் பயணித்துக் கொண்ருந்தோம். அப்போது பயணக் கூட்டத்தில் வந்த சிலர் முந்திச் செல்ல முயன்று ஒட்டகங்களைத் தட்டிவிட்டனர். சத்தம் போட்டனர். ஒரே களேபரம் ஆகிவிட்டது.

முன்னால் சென்று கொண்ருந்த அண்ணல் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் திரும்பி, சத்தமும் கூச்சமும் வந்து கொண்டிருந்த திசையை நோக்கிச் சொன்னார்கள்: **“மக்களே நிதானத்தைக் கடைபிடியுங்கள். ஏனெனில், வேகமும் அவசரப்படுவதும் நன்மை தாராது.”**

தேவையில்லாமல் அவசரப்படுவதும் விவேகமின்றி வேகமாகச் செயல்படுவதும் நன்மைக்கு வித்திடாது. அமைதியும் நிதானமும்தான் இறைநம்பிக்கையாளர்களுக்கு அழகாகும். ஆம்...! இஸ்லாம் கற்றுத் தரும் இனிய பண்பாடுகளில் ஒன்று நிதானம் எனும் அழகிய பண்பு. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைச் சரம்

மழை

நிலத்தில் விழுந்தால்
நீயே மழை
கடலில் விழுந்தால்
நீயே அலை
அதிகமாய் விழுந்தால் நீயே
வெள்ளம்
அதனால் மக்களுக்கு ஏற்படும்
பெரும் துன்பம்

பாத்திமா சுஹறா, தரம்-10
க/ அக்குறணை மு.பா.ம.வி.

நட்பு எனும் நகை

சொந்தம் சொன்ன
செந்தூரங்கள் இப்போதில்லை

மலர் மீது வீற்றிருந்த பனித்துளிகளை
தாங்கி நின்ற இதழ்களெல்லாம்
விழி மீது நீர்த் துளிகளை
சொந்தமாக்கிச் சென்று விட்டன.

ஏழ்மை எனும் குடிலினுள்ளே
அநாதை எனும் பெயருடனே
ஒளி இழந்த விழியுடனும்
உணர்விழந்த உள்ளத்துடனும்
தொலைந்து போன சொந்தத்தை
தொலைவினில் தேடுதுள்ளம்

கடத்தி விட்ட காலங்கள்
கண்ணீருடன் ஆனாலும்
பன்னீர் தெளிக்க
பாதையோரம் பார்த்திருக்கிறேன்
நட்பு எனும் நகை என்னில்
நம்பிக்கையுடன் நடப்பட்டிருப்பதால்

உ.ஹிது ஸஹ்ரானா

வாழ்த்துகிறேன்...

அகிலத்தில் அகரமாய்ப் பரிணமித்து,
அறிவில் அமிழ்த்திடும் இனிய
ஆசானாய் கிளை விரித்து,
நாவுக்கினியதாய்
நல் வார்த்தைக்குரியதாய்
கவிதையின் குவியமாய்
வழிகாட்டலின் வழிகாட்டியாய்
மறைபொருளை ஆராயும் மாமேதையாய்
ஐநிலங்களிலும் அழியாது
மறுசீர் ஏடுகளால் சிதையாது
வாழும் அகரமே
உனை நான் வாழ்த்துகிறேன்...

எம்.எம். பாத்திமதுஸ் ஸஹ்றா
தரம்: 09
அல்மனார் ம.க. மருதமுனை

அகரம் எனும் படகில்...

கல்வி எனும் கடல் கடக்க
அகரம் எனும் படகு பிடித்தேன்
அறிவு எனும் மீன் பிடிக்க
அகரத்தில் வலை வீசினேன்

மீனவர் கையில் வலை போல்
மாணவர் கையில் நீ இருப்பாய்
படகு மிதக்கும் எம் அறிவு வளரும்

மழைக்காக பயிர் காத்திருப்பது போல
அறிவுத் தேடலுக்காய் காத்திருக்கிறோம்
நீர் இல்லாமல் பயிர் வாடிடுமே
நீ இல்லாமல் மாணவர் மனமும் வாடிடுமே

அஹமட் லெப்பை றிஸான்
பொ. மஜீதியா அ.க, கதுருவெல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

வினாப்பத்திரம் I **நேரம் 45 நிமிடம்**

பின்வரும் பாடலை அவதானித்து கீழ்காணும் வினாக்களுக்கு விடை தருக.

வான் உயர வளருவேன்
ஓலை, பாளை நான் தருவேன்
தண்ணீரை அடியில் வார்த்தால்
இளநீரை முடியில் காண்பாய்
பெரியோரைக் கேட்டிடுவாய்
நான் உத்தமனா, மத்திமனா, அதர்மனா?

1. இப்பாடலில் கூறப்படுவது.
   (பனை, தென்னை, மா)
2. இப்பாடலில் இடம்பெற்ற ஒரு சோடி எதிர்ப்பதம்.
   (ஓலை - பாளை, தண்ணீர் - இளநீர், அடி - முடி)
3. வான் என்பதற்கான ஒத்த பதம்
   (விண், மண், தாரகை)
4. காண்பாய் என்பது
   (இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்)
5. இம்மரம் யாருக்கு உவமானமாகக் கூறப்படும்?
   (உத்தமர், மத்திமர், அதர்மர்)
6. சரியாக எழுதப்பட்ட வாக்கியத்தின் இலக்கத்தை எழுதுக.

   i. இன்று மாணவர்கள் பாடசாலைக்கு சமுகமளித்திருந்தனர்.

   ii. நாம் நாகரீகமாக வாழ பழகிக்கொள்ள வேண்டும்.

   iii. பறவைக் கூட்டம் வானில் வட்டமிட்டது. (.......)
7. i. நாய் வேடனை அழைத்துச் சென்றான்.

   ii. கமலினியும் ராதிகாவும் ஆற்றுக்குச் சென்றாள்.

   iii. காட்டுக்கு மத்தியில் பெரிய மயில் குழாம் ஒன்று வாழ்ந்து வந்தது. (.......)
8. பின்வரும் வசனங்களை ஒழுங்குபடுத்த பந்தி ஒன்று உருவாகும். அதன் இலக்கங்களை ஒழுங்குபடுத்தி சரியான விடைக்குக் கோடிடுக.

   i. தேனீக்கள் நண்பர்கள் அனைவரையும் துரத்தித் துரத்திக் கொத்தின.

   ii. ஞாயிற்றுக்கிழமை காலை நண்பர்கள் ஐவர் ஒரு மரத்தடியில் விளையாடுவதற்காகக் கூடினர்.

   iii. சதீஷின் தாயார் தேனீக்களின் கொட்டுதலுக்கு இலக்கான அனைவருக்கும் சிகிச்சை அளித்தாள்.

   iv. சதீஷ் தடி ஒன்றினால் தேன் கூட்டை அடித்தான்.

   v. அருகில் உள்ள மரமொன்றில் பெரிய தேன் கூட்டை நண்பர்கள் கண்டனர்.

   1. iv, v, ii, i, iii, *2.* ii, v, iv, i, iii *3.* ii, v, i, iv, iii

கீழே காணப்படும் வாக்கியங்களில் பிராணி ஒன்றின் பெயர் மறைந்துள்ளது. அதற்கு மட்டும் கோடிடுக.

09. தாய் அழுதவளைக் கவனியாது நடந்து சென்றாள்.
10. பேருந்து ஆனையிறவை வந்தடைந்தது.

மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.

11. 20 தொடக்கம் 25 வரையான தொடர் இலக்கங்களைக் கொண்ட ஓட்ட வீரர்கள் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்டனர். கலந்து கொண்டவர்கள் எத்தனை பேர்?
    i. 5 பேர் ii. 4 பேர் iii. 6 பேர்
12. வாகனம் ஒன்று பயணம் ஆரம்பிக்கும் போது மானி வாசிப்பு 009096 km எனக் காட்டியது. வாகனம் 1000m பயணம் செய்து பயணத்தை முடித்தபோது மானி வாசிப்பு என்ன?
13. வருடத்தின் 31 நாட்களைக் கொண்ட மாதங்களின் மொத்த நாட்கள் எத்தனை?
    i. 207 நாட்கள் ii. 227 நாட்கள் iii. 217 நாட்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. பின்வரும் எண்களில் பெறுமானம் கூடிய எண் எது?

i. 3.5 ii. 3.015 iii. 3.099

15. ரூபா 15 இற்கு இரண்டு மாம்பழங்கள் வாங்கலாம் எனின், 9 மாம்பழங்கள் வாங்க எவ்வளவு பணம் தேவை?

i. ரூபா 76.50 ii. ரூபா 68.50 iii. ரூபா 67.50

16. இரண்டு வளையல்களின் விலை ரூபா 48 ஆகும். ஐந்து சோடி வளையல்களின் விலை யாது?

i. ரூபா 480.00 ii. ரூபா 240.00 iii. ரூபா 340.00

17. 21ஆம் நூற்றாண்டு என்பதால் குறிப்பது

i. 2000 ஆண்டு முதல் 2999ஆம் ஆண்டு வரை

ii. 2100ஆம் ஆண்டு முதல் 2199ஆம் ஆண்டு வரை

iii. 2000ஆம் ஆண்டு முதல் 2199ஆம் ஆண்டு வரை

18. 3 kg சீனியில் 75 கிராம் சீனிப் பக்கற்றுக்கள் எத்தனை தயாரிக்கலாம்?

i. 50 பைக்கற்றுக்கள் ii. 40 பைக்கற்றுக்கள் iii. 100 பைக்கற்றுக்கள்

19. எமது நாட்டு அரச இலச்சினை பொறிக்கப் பட்டது.

i. தேசிய அடையாள அட்டையில்

ii. உணவு முத்திரையில்

iii. பொலிஸ் நிலைய அடையாள அட்டையில்



20. உருவில் நிழற்றப்பட்ட பகுதி முழு உருவில் என்ன பின்னம்?

i. 1/2 ii. 3/4 iii. 4/9

21. எமது நாட்டில் உள்ள விக்டோரியா நீர்வீழ்ச்சி எந்த மாகாணத்தில் அமைந்துள்ளது?

i. ஊவா மாகாணம் ii. கிழக்கு மாகாணம் iii. மத்திய மாகாணம்

22. எமது நாட்டின் இயற்கைத் துறைமுகம் எந்த மாகாணத்தில் அமைந்துள்ளது?

i. மேல் மாகாணம் ii. கிழக்கு மாகாணம் iii. வட மத்திய மாகாணம்

23. கிராமத்தில் உள்ள மக்களுக்கு அவசர செய்தி ஒன்றை அறிவிக்க உதவுவது?

i. தொலைபேசி ii. ஒலி பெருக்கி iii. வானொலி

24. முயல், குரங்கு, மயில், எலி ஆகியவற்றில் முலையூட்டி அல்லாதது எது?

i. முயல் ii. மயில் iii. எலி iv. குரங்கு

பொருந்தாத விடைக்குக் கோடிடுக.



25. ஆமை, குயில், குருவி



26. குரங்கு, யானை, சிறுமி

27. சைக்கிள், விமானம், உழவு இயந்திரம்

பின்வரும் வசனங்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் குறிப்பிடுக.

28. நெல்லுக்கான இளமைப் பெயர் நாற்று ( )

29. வாழையின் இளம் பிஞ்சு கச்சல் ( )

30. மாவின் இளம் பிஞ்சு மூசு ( )

31. பறவையின் மலம் எச்சம் ( )

32. நெல்லின் உள்ளீடு அரிசி ( )

கீழ்வரும் வாக்கியங்களுக்கு உரிய குறியீடுகளை இடுக.

33. தருமன் பீமன் அர்ச்சுனன் நகுலன் சகாதேவன் போன்றோர் ஒரு தாய் பிள்ளைகளாவர்.

34. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்பது முதுமொழி

35. அஞ்சல் ஓட்டப் போட்டி ஒன்றில் ஒரு குழுவில் எத்தனை பேர் பங்குபற்றலாம்?

i. 3 பேர் ii. 5 பேர் iii. 4 பேர்

36. இரவு வானில் சந்திரனைச் சூழ பரிவட்டம் தோன்றினால் என்ன நிகழும்?

i. புயல் ஏற்படலாம் ii. மழை பெய்யலாம் iii. வரட்சி ஏற்படலாம்

37. இலங்கையில் அதிகளவு குளங்கள் கொண்ட மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i. கண்டி மாவட்டம்   ii. அநுராதபுர மாவட்டம்   iii. காலி மாவட்டம்

விளையாட்டுக்களின் பெயர்களை எழுதுக.

38. .... 39. .... 40. .... 41. ....

42. தாவரத்தின் இலையில் மயிர்கள் காணப் படும் இலை எது?

i. பூசணி   ii. தாமரை   iii. வாழை

43. உமது அப்பாவின் தந்தைக்கு நீர் என்ன முறை?

i.பேரன்   ii. பாட்டன்   iii. மகன்

44. உமது அப்பாவின் தங்கை உமக்கு என்ன முறை?

i. சிறிய தாய்   ii. மாமி   iii. பெரியம்மா

45. 9093 இற்கு பிந்திய எண் எது?

i. 10 000   ii. 9010   iii. 9100

46. 6700 இற்கு முந்திய எண் எது?

i. 6099   ii. 6699   iii. 6999

47. ABC   BCA   எனின்   DEF

i. FED   ii. EFD   iii. DEF

48. ஓர் அணியில் 11 பேர் பங்கு பற்றும் விளையாட்டு.

i. உதைப்பந்தாட்டம் ii. கூடைப்பந்தாட்டம் iii.பூப்பந்தாட்டம்

49. அதிகளவு நீர்த்தன்மை கொண்டுள்ள பழங்களில் ஒன்று.

i. வாழைப்பழம் ii. விளாம்பழம் iii. வத்தகை

50. அசுத்த நீரில் குளிப்பதனால் ஏற்படும் நோய் எது?

i. கண்நோய் ii. வயிற்றோட்டம் iii. கொலரா

5ம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி

குளி/ மடிகே மிதியால மத்திய கல்லூரியில் 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களான ஏ.ஆர்.எப். இஸ்கா (160), எம்.எஸ்.எஸ். பானு (156), எம்.எஸ்.எப். சஜிய்யா (176), எம்.கே.எம். முர்ஷித் (177), எம்.எஸ்.எம். சர்தான் (163), எம்.எம். மஸீன் அஹமட் (175) ஆகியோரையும் ஆசிரியர்களான, எம்.ஏ.எஸ். ஹிதாயா, எம்.ஏ.எஸ். சாமிரா, எம்.ஏ.ஏ. றஹ்மான் (அதிபா), எம்.எஸ்.எம். நஜீப்தின், யூ.எல்.எம். ஜிப்ரி ஆகியோரையும் படத்தில் காணலாம்.

மேலும், பரீட்சையில் 100க்கு மேற்பட்ட புள்ளிகளை பின்வருவோர் பெற்றுக் கொண்டனர்.

எம்.எஸ்.எஸ்.எம். அஸ்கான் (149), ஏ.பீ. சுமையா (149), எம்.டீ.எப். முஹம்மத் (147), எம்.எல்.பீ. நுப்லா (146), எம்.ஏ.எம். அக்மல் (145), எம்.எஸ். சப்னா (142), ஜே.எப். இஸ்ரா (141), எம்.என்.எப். அஸ்பாக் (134), எஸ். சம்லா (133), எம்.எம்.பீ. மபாஸா (132), ஐ.எப். அஸ்மா (127), எம்.எச்.எப். ஹஸ்பா (127), எம்.வை.பீ. யஸ்ரா (127), எம். என்.எம். நாஸர் (124), எம்.என். எம். நாஸிக் (122), எம்.கே.பீ. நஸாஹா (121), எம்.பீ.பீ. சிபா (121), எம்.ஏ.பீ. அப்ரா (121), எம்.எஸ்.எப். ஹலீமா (120), ஏ.எச்.பீ. அஸ்பிகா (120), எம்.என்.பீ. அஸ்கா (117), ஆர்.எப். சம்லா (116), எம்.எல்.எப் நுஸ்லா (109), எம்.எச்.எம். ஹஸ்னா (108), எம்.ஏ.எம். அஸ்கின் (102), எம்.என்.என். பேகம் (102), எம்.டீ.எப். இனாபா (101).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

வினாப்பத்திரம் II நேரம் 1 மணி 15 நிமிடம்

பின்வரும் பந்தியை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

இயற்கைச் சூழல் இயற்கை அன்னையின் வரப் பிரசாதமாகும். அதனைப் பேணிப் பாதுகாப்பது ஒவ்வொரு மனிதனதும் தலையாய கடமையாகும். மனிதன் தனது எல்லாவித தேவைகளுக்கும் சூழலிலேயே தங்கியிருக்கிறான். ஆனால், நிலம், வளி, நீர் போன்றவை மாசடைவதற்கு அவனே காரணமாகவும் ஆகிவிடுகின்றான்.

தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவுகள் நீரிலே கலக்கப்படுவதால் நீர் அசுத்தம் அடைகின்றது. அதிலிருந்து வெளியேறும் புகை வளியுடன் கலப்பதால் வளி மாசடைகின்றது. இதனால் மனிதன் தனக்குத்தானே தீங்கை ஏற்படுத்திக் கொள்கின்றான். வாகனங்களில் இருந்து வெளியேறும் புகை, பேரிரைச்சல் போன்றவையும் சூழலை மாசுபடுத்துவதனை நாம் காணலாம். இதனால் மனிதன் பல சுவாச நோய்களுக்கும் வேறு பல வியாதிகளுக்கும் உள்ளாகின்றான்.

எவ்வளவுதான் சொத்து சேர்த்தபோதிலும் அவன் நோயாளியானால் அந்த செல்வத்தில் எந்தப் பயனும் இல்லை. இதனால்தான் முன்னோர் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் எனக் கூறியுள்ளார்கள். ஆகவே, நாம் சூழலைப் பாதுகாக்க வேண்டும் எனில் சுத்தம் பேண வேண்டும். சூழலைப் பாதிக்கும் எந்தச் செயலிலும் ஈடுபடக் கூடாது.

1. இயற்கை அன்னையின் வரப்பிரசாதம் எது?
2. நிலம், வளி, நீர் அசுத்தமடைவதற்குக் காரணம் யார்?
3. நீர் எவ்வாறு அசுத்தமடைகின்றது?
4. பந்தியில் காணப்படும் ஒரு பழமொழியைக் குறிப்பிடுக.

சுத்தத்தோடு தொடர்புடைய இரு பழமொழிகளை எழுதுக.

5. ....

6. ....

7. இயற்கை என்பதன் எதிர்ப்பதம் யாது?
8. மாசடைவதற்கு என்பதைப் பிரித்து எழுதுக.
9. தொழிற்சாலை என்பது?

   i. பொருட்பெயர் ii. இடப்பெயர் iii. தொழிற்பெயர்

10. மனிதர்கள் என்பது?

    i. ஒன்றன்பால் ii. பலவின்பால் iii. பலர்பால்

எண் கோலத்தை அவதானித்து கீழ்வரும் எண் கோலங்களில் வித்தியாசமான எண்ணின் கீழ் கீறிடுக.

11. *326, 337, 348, 359, 369*
12. *168, 176, 185, 194, 203*
13. *599, 608, 617, 621, 635*
14. காடுகளைக் குறிக்கப் பயன்படும் நிறம்?

    i. நீலம் ii. பச்சை iii. கறுப்பு

15. இலங்கையில் காணப்படும் தீவு எது?

    i. நைனா தீவு ii மாலைதீவு iii. சுமாத்திரா தீவு

16. சிங்கம், புலி, கரடி என்பன நீரை எவ்வாறு பருகுகின்றன?

    i. நீரை உறிஞ்சி ii நாக்கினால் நக்கி iii. கூற முடியாது

17. கரையோரப் பகுதியில் அமைந்துள்ள பிரதேசங்கள்.

    i. காலி, புத்தளம், மன்னார்

    ii கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம்

    iii. நுவரெலியா, பதுளை, ஹட்டன்

18. மரங்களின் வித்துக்களை தூர இடங்களுக்கு கொண்டு செல்லும் பிராணி எது?

    i. அணில் ii. காகம் iii. வௌவால்

19. காபோவைதரேற்று காணக்கூடிய உணவுகள் யாவை?

    i. உருளைக்கிழங்கு, வற்றாளைக் கிழங்கு

    ii. இறைச்சி, மீன் iii. பழங்கள், மரக்கறிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. இந்தியாவின் தேசிய பறவை எது?

i. மயில் ii. கிளி iii. கழுகு

600 இனிப்புக்களில் 40ஐ மீதப்படுத்தி வைத்து

21.

(பிற்பகல் 1.10 மணி) இக்கடிகாரத்தின் நேரம் 20 நிமிடங்கள் முந்திக் காட்டுகிறது.

சரியான நேரத்தை 24 மணி கடிகார நேரத்தில் எழுதுக. ....

22. குமார் தனது காணியில் 1/8 பங்கை அம்மா வுக்கும் 2/4 பங்கை அப்பாவுக்கும் கொடுத்தான். அவனுக்கு கிடைக்கும் காணியின் பங்கு என்ன?

23. இவ்வுருவின் சுற்றளவு யாது?



மற்றைய எல்லாவற்றையும் ஒரு பைக் கற்றில் 7 வீதம் இருக்குமாறு சிறிய பைக் கற்றுக்களில் பொதி செய் யப்பட்டன.

24. சிறிய பைக்கற்றுக்களில் பொதி செய்யப் பட்ட இனிப்புக்களின் மொத்த எண் ணிக்கை?

25. அத்தகைய எத்தனை சிறிய இனிப்புப் பைக் கற்றுக்கள் தயார் செய்யலாம்?

குறியீட்டிற்குப் பொருத்தமான பெயரை எழுதுக.

26. 27. 28.

29. இந்து, பௌத்தர் போன்றோரின் அலங்கார வேலைக்கு உதவும் பூ வகை.

i. தென்னம் பாளை ii எவர்கிறீன் தாவரம் iii. மல்லிகை

30. இராக் காலங்களில் பாதுகாப்புக்காக மரத்தை நாடும் பிராணிகள்.

i. காட்டுக் கோழி, குரங்கு

ii. மர அணில், மீன் கொத்தி

iii. புறா, மீன்கொத்தி

31. இரவில் மலரும் பூக்களில் ஒன்று.

i. துரியம் பூ ii. தாமரை iii. சூரியகாந்தி

32. வெய்யில் காலங்களில் குளிர்ச்சியான நிழல் தரும் மரம்.

i. தென்னை ii. ஆலமரம் iii. பூவரசு

33. மலைநாட்டில் பயிரிடப்படும் தாவரங்களில் இலை, பூ என்பவற்றை சேதமாக்கும் பிராணி எது?

i. வண்டு ii. குளவி iii. நத்தை

34. மணம் எதுவும் அற்ற பூக்கள் யாவை?

i. எக்சோரா, செவ்வரத்தை

ii. மல்லிகை, கடதாசிப் பூ

iii. குண்டு மல்லிகை, எக்சோரா

35. அலுமினியப் பாத்திரங்களை கழுவிச் சுத்தம் செய்யப் பயன்படுத்தும் பதார்த்தம்?

i. பழப்புளி ii. தேசிப்புளி iii. சவர்க்கார வகை

36. அரிசி தானியங்களிலிருந்து பதர், தூசு என்ப வற்றை அகற்ற உதவுவது?

i. அரிக்கஞ்சட்டி ii சுளகு iii. பானை

37. அலுமினியப் பாத்திரங்களில் சமைக்கப் படும்போது உணவுடன் கலக்கக்கூடாத பொருள்?

i. வெள்ளைப் பூடு ii. பழப்புளி iii. ரம்பை

வகுப்பொன்றில் காலை ஆகாரம் சாப்பிட் டவர்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.



38. இடியப்பம் சாப்பிட்டவர்கள் எத்தனை பேர்?

39. அப்பம் சாப்பிட்டவர்கள் எத்தனை பேர்?

40. பிட்டு மாத்திரம் சாப்பிட்டவர்கள் எத்தனை பேர்?

41. சுங்கத் திணைக்களத்திற்கு பொறுப்பாக இருப்பவர்?

i. பணிப்பாளர் ii. ஆணையாளர் iii. தலைவர்

42. வங்கிக்குப் பொறுப்பாக இருப்பவர்?

i. ஆணையாளர் ii. தலைவர் iii. முகாமையாளர்

43. ஆட்பதிவுத் திணைக்களத்திற்குப் பொறுப்பாக இருப்பவர்?

i. ஆணையாளர் ii. தலைவர் iii. பணிப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44. கீழே தரப்பட்டுள்ள பென்சிலின் நீளம்?



45. நிலத்தின் கீழ் வேரில் காய்க்கும் தாவரம்.

i. வெங்காயம் ii. நிலக்கடலை iii. இஞ்சி

46. வானிலை தொடர்பான அறிவுறுத்தல்களைத் தரும் நிறுவனம்?

i. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
ii. வானிலை அவதான நிலையம்

iii. தொலைத் தொடர்பு சாதனம்

47. தந்தை வேலைகளை மளமள என செய்து முடித்தார். இவ்வாக்கியத்தில் கோடிடப்பட்ட சொல்.

i. இணை மொழி ii. இரட்டை கிளவி
iii. உவமானம்

48. கமலனின் முகம் கோவைப்பழம் போல செக்கச் செவேரென சிவந்தது. கோவைப் பழம் என்பது.

i. உவமானம் ii. உவமேயம் iii. இணைமொழி

பின்வரும் சொற்களுக்கு எதிர்பாற் கருத்துக்களைத் தருக.

49. நிபுணன் - 50. மாணாக்கி - 51. உழத்தி-

பின்வரும் சிங்கள வாக்கியத்திற்கான கருத்தை எழுதுக.

52. உசகச .... லஸ்ஸன அஹச ....

பின்வரும் சொற்களை கவனித்து அதற்குப் பொருத்தமான இன்னுமொரு சொல்லை எழுதுக.

53. பாதை, தெரு, சாலை 54. தீ, அக்கினி, தழல்

பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கான கருத்தை எழுதுக.

55. Sinhala Book .... 56. Post Office ....

பின்வரும் சொற்களுக்கு இளமை மரபுப் பெயர்களை எழுதுக.

57. மீன் .... 58. பனை ....

'எனதருமை பள்ளித் தோழன்' என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது நான்கு சொற்களையேனும் கொண்டிருத்தல் அவசியம்.

எதிர்பார்ப்புக்களை சுமந்து வரும்....
(19ஆம் பக்க தொடர்)

லண்டன் 2012 ஒலிம்பிக் ஜோதியானது மே 18 ஆம் திகதி ஏற்றப்பட்டு 8,000 மைல்கள் தூரம் பிரித்தானியாவைச் சுற்றி 8,000 பேரால் எடுத்துச் செல்லப்படவுள்ளதோடு 70 நாடுகளின் ஊடாக பிரயாணம் செய்யவுள்ளது.

1000 போட்டி நடுவர்கள் பங்கேற்கவுள்ளனர்.

ஒலிம்பிக் பூங்கா 500 ஏக்கர் பரப்பளவில் ஸ்டார்போட் மற்றும் கொண்டைன் நைன் ஆகிய இடங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. பிரதான ஒலிம்பிக் மைதானம் 80,000 இருக்கை கொண்டதாகும். இதில் ஆரம்ப, இறுதி நிகழ்ச்சிகள் நடை பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இது தவிர, 20,000 பேர் உள்ளடக்கக்கூடிய நீச்சல் தடாக மைதானம், ஹொக்கி சென்டர், கோப்பர் பொக்ஸ், றிவர் பேங் எரினா என இன்னும் பல மைதானங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

லண்டன் ஒலிம்பிக்- 2012 ஏற்பாடுகள் யாவும் நிலைத்து நிற்கும் அபிவிருத்தியைக் கருத்திற் கொண்டு ஐந்து பிரதான விடயங்களை முன்னிறுத்திச் செய்யப்பட்டுள்ளன.

1. காலநிலை மாற்றம்

2. வீண்விரயத்தை தடுத்தல்

3. இயற்கை பல்வகைமையைப் பேணல்

4. ஆரோக்கிய வாழ்வை மேம்படுத்தல்

5. ஒலிம்பிக் பங்கேற்பை வளர்த்தல்

ஒலிம்பிக் வரலாற்றில் இலங்கை 1948இல் முதலாவதாக பங்கேற்றது. இப்போட்டியில் 400மீ ஓட்டப் போட்டியில் டங்கன் வைட் இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டார். பின்னர் 2002 இல் சிட்னியில் இடம்பெற்ற போட்டியில் சுசந்திகா ஜயசிங்க இரண்டாமிடத்தை பிடித்துக் கொண்டமை குறிப்பிடத் தக்கது.

எதிர்வரும் ஒலிம்பிக் போட்டியில் இலங்கை சார்பாக பெட்மிடன் வீரர் நிலூகா வருநாரட்ன, மரதன் ஓட்ட வீரர் அனுராதா குரே, நீச்சல் போட்டியில் ஹிசான் உனம்பூவ, ரேசிகா உடுகம்பொல ஆகியோர் பதக்கம் பெறும் எதிர்பார்புக்களோடு கலந்து கொள்கின்றனர். நாமும் அவர்களின் வெற்றிக்காக வாழ்த்துவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகாகோவின் பிரபலமான இடமான ஸ்டேட் ஸ்டிரீட் (State Street) இல் பயங்கரமான தீ விபத்து ஏற்பட்டது. மறுநாள் பொழுது விடிந்தது. இருள் மறையவில்லை. புகைந்து கொண்டிருக்கும் இடிபாடுகளுக்குள் சாம்பராகிப் போன தங்கள் கடைகளின் கதியைப் பார்த்து கலங்கி நின்றார்கள் வியாபாரிகள். மறுபடியும் அங்கேயே தொழிலைத் தொடர்வதா அல்லது மூட்டைகட்டிவிட்டு வெளியேறுவதா என்று ஆலோசனை செய்தனர்.

சிகாகோவே வேண்டாம் வேறு இடத்திற்குச் சென்று விடுவோம் என்று எல்லா வியாபாரிகளும் முடிவெடுத்தனர், ஒரே ஒருவரைத் தவிர. அதே இடத்தில் வியாபார நிலையத்தை எழுப்பி வியாபாரத்தை ஆரம்பிக்க முடிவு செய்த அந்த



தோல்விகளால் துவண்டு போகக் கூடாது

வியாபாரி எரிந்து சாம்பராகிப் போன தனது கடை இருந்த இடத்தைப் பார்த்துச் சொன்னார்:

“ஜென்டில்மேன்! எத்தனை தடவை எரிந்து சாம்பரானாலும் பரவாயில்லை. கவலைப்படாமல் இந்த இடத்திலேயே உலகின் மிகப் பெரிய வியாபார நிலையத்தை நிர்மாணிப்பேன்.”

அவர் அன்று கட்டிய அந்தக் கட்டடம் இன்றும் கம்பீரமாக தோற்றத்தில் மட்டுமல்ல, வியாபாரத்திலும் நிமிர்ந்து நிற்கின்றது. எரிந்து போன கட்டட இடிபாடுகளுக்குள் பீனிக்ஸ் பர்வையாய் உயிர்த்தெழுந்த அவர்தான் மார்ஷல் பீல்ட். மார்ஷல் பீல்ட்டுக்கும் மற்ற வியாபாரிகளுக்கும் உள்ள வித்தியாசம் இதுதான். தோல்விகளால் துவண்டு போகின்றவர்களுக்கும் அதை எதிர்த்துப் போராடுபவர்களுக்கும் உள்ள வித்தியாசம் இதுதான்.

“நான் சந்தித்த 500க்கும் மேற்பட்ட சாதனையாளர்கள் என்னிடம் சொன்ன விஷயம் இதுதான். எந்த இடத்தில் தோல்வி அவர்களைப் புரட்டி எடுத்ததோ, அதைத் தாண்டி ஒரே ஒரு அடி வைத்ததும் மகத்தான வெற்றி கிடைத்தது. இந்தத் தோல்வி இருக்கிறதே, அது நம்மிடம் சில சமயங்களில் கபடமான ஏமாற்றுத் தந்திரங்களைக் கையாளும்.” -நெப்போலியன் ஹில்

பெரும்பாலும் நாம் தோல்வியைத் தாங்கிக் கொள்ளும் தைரியமற்றவர்களாகவே இருந்திருக்கிறோம். தோல்விகள் மீள முடியாத தடைகள் என நினைக்கிறோம். தோல்விகளை இறுதித் தீர்மானங்களாகக் கருதுகிறோம். தோல்விகளை முடிவுகளாக நோக்குகிறோம். இந்த மனோநிலை மாற வேண்டும். தோல்விகளால் நாம் துவண்டு போகக்கூடாது!

தோல்வியைத் தோற்கடிக்கும் தைரியம் வேண்டும். தோல்வியைத் துவண்டு போகச் செய்யும் நம்பிக்கை வேண்டும். தோல்வியைத் துரத்தியடிக்கும் வீரம் வேண்டும்.

தோல்வியை இரண்டு விதமாகப் பிரிக்கலாம். ஒன்று தற்காலிகத் தோல்வி. மற்றையது நிரந்தரத் தோல்வி. தற்காலிகத் தோல்வி அனைவருக்கும் பொதுவானது. நிரந்தரத் தோல்வி தோல்வியாளர்களுக்கு மட்டும் உரியது. தற்காலிகத் தோல்வியை நிரந்தரத் தோல்வியாக ஏற்பவர்கள் பின்வாங்கிவிடுவர். நிரந்தரத் தோல்வியைக்கூட சவாலாக எடுப்பவர்கள் அதனையும் தற்காலிகத் தோல்வியாக்கிவிடுவர்.

வெற்றி வெற்றி என்ற நினைப்பில் இருப்பவர்களை வெற்றி வந்தடைகிறது. எப்போதும் தோல்வி என்ற நினைப்பில் இருப்பவர்களை தோல்வி சுருட்டி விடுகிறது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணங்களின் வண்ணங்கள்

அப்ரா அர்ஸ்
இல்லகொல்ல - குருக்குத்தலை

எம்.எப். மின்ஹா, தரம் - 8
பொ/ அல்ஹிலால் ம.க. - தம்பாளை

ஏ.ஆர். அஸ்ரா பானு, இல்லகொல்ல
குருக்குத்தலை

எம்.சீ.எப். ஹஸீனா, தரம் - 8
பொ/ அல்ஹிலால் ம.க.- தம்பாளை

எம்.என். பாத்திமா நஸ்ரின், தரம் - 6
சது/ அன்ரூஸ் பெண்கள் ம.க. நாவலபிட்டிய

என்.எப். நௌலா, தரம் - 9,
முஸ்லிம்.ம.அ.க.- கள் எலிய

அஸீர் அஸ்ரா, தரம் - 9
முஸ்லிம்.ம.அ.க - கள் எலிய

எம்.எஸ். ஸம்லி நுஹ்லா, தரம்- 07
கமு/ அல்ஹம்றா வி, மருதமுனை

பா. நிஸ்கா முஹம்மத், தரம் - 9
முஸ்லிம்.ம.அ.க.- கள் எலிய



ஜே.எப். ஹப்ஸா, முஸ்லிம் ம.அ.க.
கள் எலிய

ஜே.எப். ஹஸ்மியா, தரம் - 9
முஸ்லிம்.ம.அ.க. - கள் எலிய

றுக்ஸானா சுஹைப், தரம் - 10
அ/ மனாருல் உலூம் மு.ம.வி.- அனுராதபுரம்

எம்.ஆர்.எம். சவ்வாப், தரம் - 6
புத்தளம்

இப்ரா இர்பான்
குருணாகல்

ஆர்.எம். அஸ்ஸாம்
தரம் - 05
தி/ அல்தாரிக் ம.வி. கந்தளாய்

எம்.கே.எம். முபீஸ்
தி/ கிண்/ சிறாஜ் மு.ம.வி.
கிண்ணியா

அடுத்த சித்திரத்திற்கான தலைப்பு : 2012 ஒலிம்பிக்

இறுதித் திகதி : 20.03.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாணாக்கரே...!

உங்கள் அறிவுக்கு விருந்தளிக்கும் சிறுவர் கலைக்களஞ்சியம் வெளிவந்துவிட்டது.

ஆஃபாக்

சிறுவர் கலைக்களஞ்சியம்

அரபு, ஆங்கிலம், உருது, ஜேர்மன், நோர்வே ஆகிய மொழிகளில் சர்வதேசத்தில் பிரபலம் பெற்ற ஆஃபாக் சிறுவர் கலைக்களஞ்சியம் இப்போது தமிழில்...

சர்வதேச தரத்தில் உலகம் தழுவிய தகவல்களை உங்கள் கைகளிலும் சிந்தனையிலும் தவழச் செய்ய இன்றே வாசியுங்கள்...

AFAQ
சிறுவர் கலைக்களஞ்சியம்

- ஒவ்வோர் இதழிலும் ஒவ்வொரு தனித் தலைப்பு
- முழுமையான தகவல்கள்...
- தரமான தாளில்... 8 பக்கங்களில்...
- தரமான அச்சுப் பதிப்பு...
- எளிய தமிழ்...
- பல்வர்ண சித்திரங்கள்...

விலை ரூபா 50.00 மட்டுமே

கிடைக்குமிடங்கள்:

ISLAMIC BOOK HOUSE
77, Dematagoda Road,
Colombo - 09

JMF
77, Dematagoda Road,
Colombo 09, Tel: 011 2698771, 0777412561

மேலதிக தொடர்புகளுக்கு: **T. Musthaq 0777 396 306**

INSIGHT

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org